மாத இதழ் ரூ.10/-
Monthly Issue Rs.10/-

வருட சந்தா ரூ.100/-
Yearly Subscription Rs.100/-

# தேவனுடைய வார்த்தை

# DHEVANUDAIYA VAARTHAI

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக (கொலோ 3:16)

மலர் / Volume 18 இதழ் / Issue 3 மார்ச் / March 2020




"வாதை உன் கூடாரத்தை அணுகாது.
உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி,
உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக்
கட்டளையிடுவார்" [சங்.91:10,11]



# வாழ்க்கையில் மற்றவர்களை நேசியுங்கள்

உலகமே வியந்து பொறாமைப்படும் உச்ச நிலையைத் தொட்ட ஆப்பிள் நிறுவனத்தின் அதிபர் ஸ்டீவ் ஜாப்ஸ் உடல் நலம் குன்றி 56 வயதில் இந்த உலகைவிட்டு பிரிவதற்கு முன்பாக சொன்ன செய்தி:

வர்த்தக உலகில் வெற்றியின் உச்சம் தொட்டேன். மற்றவர் பார்வையில் என் வாழ்க்கை, வெற்றிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டது. நோயுற்றுப் படுக்கை யில் இருக்கும் நான் இப்போது என் முழு வாழ்க்கையையும் நினைத்துப் பார்க் கிறேன். பெற்ற புகழும் செல்வமும் அதனால் அடைந்த பெருமையும் இப்போது எனக்கு அர்த்தமற்றதாகத் தோன்றுகிறது.

**உங்கள் காரை ஓட்ட யாரையாவது நியமிக்கலாம். உங்களுக்காக சம்பாதிக்க எத்தனைபேரை வேண்டுமானாலும் நியமிக்கலாம். ஆனால் உங்கள் நோயையும் அதனால் சந்திக்கும் வலியையும் தாங்கிக் கொள்ள யாரையும் நியமிக்க முடியாது. எந்தப் பொருள் தொலைந்தாலும் மீண்டும் தேடி விட முடியும். ஆனால் வாழ்க்கை தொலைந்துவிட்டால் கிடைக்கவே கிடைக்காது.**

வாழ்க்கை எனும் நாடக மேடையில் இப்போது நீங்கள் எந்தக் காட்சியில் நடித்துக் கொண்டிருந்தாலும் நாடகம் முழுமையாக முடிக்க முடியும் என்று சொல்ல முடியாது. நடுவிலேயே எப்போது வேண்டுமானாலும் திரை விழலாம். நாம் பக்குவமடையும் போதுதான் சில விஷயங்கள் புரியும். முப்பது ரூபாய் கடி காரமும் சரி மூன்று இலட்சம் ரூபாய் கடிகாரமும் சரி ஒரே நேரம்தான் காட்டும். செலவழிக்க வாய்ப்பு இல்லாதபோது உங்கள் மணிபர்சில் நூறு ரூபாய் இருந் தாலும் ஒன்றுதான்; ஒருகோடி இருந்தாலும் ஒன்றுதான். நீங்கள் தனிமையான பிறகு 300 சதுர அடி வீட்டில் வசிப்பதும் 30000 சதுர அடி பங்களாவில் வசிப்பதும் ஒன்றுதான். ஆகவே உங்களைச் சுற்றிலும் இருக்கும் அனைவரிடமும் அன்புடன் பேசிப் பழகுங்கள். அதுதான் உண்மையான மகிழ்ச்சி.

**சிந்தனைக்கு.** **நன்றி: இணையதளத் தகவல்**

ஆப்பிள் நிறுவன அதிபர், ஏன் கடித்த ஒரு ஆப்பிளை நிறுவனத்தின் அடையாளச் சின்னமாக (logo) தெரிந்தெடுத்தார் என்பது விநோதமாக இருக்கிறது. ஒரு வேளை எங்களது தயாரிப்பான ஐ-போன் போன்ற தயாரிப்புகளை ருசித்துப் பாருங்கள் (Taste the apple) என்று சொல்கிறாரோ? ஏதேன் தோட்டத்தில் சாத்தா னின் வஞ்சனையால், “புசிக்கக் கூடாது” என்று கர்த்தரால் தடை செய்யப்பட்டக் கனியைப் (Forbidden Fruit) ஏவாள் பறித்து புசித்துவிட்டு ஆதாமுக்கும் கொடுத்து கட்டளையை மீறியப்படியால் எல்லாவற்றையும் இழந்து, ஏதேன் தோட்டத்தை விட்டு விரட்டப்பட்டதை நினைவூபடுத்துகிறாரா? எது எப்படியோ ஆதி.3:6யில் சொல்லப்பட்டதுபோல கவர்ச்சியை உண்டாக்கி முடிவில் ஆதாமும் ஏவாளும் தேவசமுகத்தைவிட்டு விரட்டப்பட்டது போல இன்று ஐ-போன் போன்ற சாதனங்கள் மாறிவருகிறதோ? எச்சரிக்கையடையுங்கள்.



**மலர் - 18 மார்ச் - 2020 இதழ் - 3**

**பொருளடக்கம்**


| | |
|---|---|
| 1. தலையங்கம் | 3 |
| 2. இயேசுவை சந்திக்க உனக்கு பயமா? | 6 |
| 3. கொரோனா வைரஸ் | 7 |
| 4. சீனக் கிறிஸ்தவர்களின் முழக்கம் | 11 |
| 5. மோட்சப்பிரயாணம் - பாகம்-8 | 12 |
| 6. குடியுரிமை | 16 |
| 7. தென் தமிழகத்தில் கால்டுவெல் | 20 |
| 8. நாச்சியார் | 24 |
| 9. நாம் ஆண்டவருக்கு வேண்டும் | 28 |
| 10. செய்திகள் .... | 2, 7 |


**K. செல்வின் தங்கதுரை**
தொகுப்பாசிரியர்
செல்: 98421 43523 / 90873 06940

**வேர்டு ஆஃப் கிரைஸ்ட் அலுவலகம்**
**D.No.23-B, "தை கிரேஸ்"**
செபஸ்டியார் கோவில் தெரு, நியூ எல்லீஸ் நகர் விரிவாக்கம், மதுரை - 16.
**போன்:** (0452) 4345580.
E-mail : wocmdu@gmail.com

**"எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்" (சங்.57:2)**

**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,**

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்,

தாவீது, சவுல் இராஜாவால் எந்த வேளையிலும் தான் கொல்லப்படலாம் என்ற அச்சத்தில் தன் ஜீவனைத் காத்துக் கொள்ள காடுகளின் மறைவிடங்களிலும், மலையிலுள்ள குகைகளிலும் மறைந்து வாழ்ந்த காலம். அப்படிப்பட்ட அச்சுறுத்தலின் மத்தியில் என்கேதி என்ற வனாந்திரத்தில் ஒரு குகையில் மறைந்திருந்த வேளையில் எழுதிய பாடல்தான் 57ஆம் சங்கீதம். அச்சங்கீதத்திற்கு தாவீது ஒரு தலைப்பு கொடுத்திருப்பதைக் காணலாம். அதில் "அல்தஷ்கேத்" என்ற ஒரு சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு எபிரேய மொழியில் **"அழித்து விடாதீர்"** (Do not destroy) என்று அர்த்தம். அச்சத்தின் உச்சத்தில் தாவீது இருந்திருக்க வேண்டும். ஆகவேதான் அப்படி ஒரு தலைப்பைக் கொடுத்திருக்கிறான். "மிக்தாம்" என்ற மற்றொரு சொல்லையும் அத்தலைப்பில் காண்கிறோம். அதற்கு எபிரேய மொழியில் **"நிரந்தரமான வெட்டெழுத்து"** (Engraven or Permanent writing) என்று அர்த்தம். ஆகவே அந்த சங்கீதம் அப்படி எழுதப்படவேண்டும் என்ற தனது விருப்பத்தையும் அந்த

தலைப்பில் வைத்திருக்கிறான். அப்படியானால் அந்த சங்கீதம் பின்வரும் அனைத்து சந்ததிகளுக்கும் அதை செய்தியாக அதில் அடக்கி வைத்திருக் கிறான் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தாவீது **தேவன் மீதுள்ள நிச்சயமான ஆழ்ந்த நம்பிக்கையை அல்லது பற்றுறுதியையும்** (Confidence) **பின்வரும் சந்ததியைக் குறித்தக் கரிசனையையும் வெளிப்படுத்துகிறான்.** அதைத் தான் தலைப்பு வசனத்தில் வாசிக்கிறோம். அந்த வசனத்தின் பிற்பகுதியில் நான் "தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்" என்று தமிழில் சொல்லப்பட்டிருந் தாலும் அது ஆங்கில வேதாகமத்தில் "I will cry unto God" என்று சொல்லப் பட்டிருக்கிறது. "கூப்பிடுவேன்"என்ற சொல் தேவனை நோக்கிக் கதறுகிற அனுபவமாக இருக்கிறது. கதறுதலோடும் கண்ணீரோடும் ஏறெடுக்கும் ஜெபங்களுக்கு தேவன் இரங்கி உடனடியாகப் பதிலளிக்கிறவராயிருக்கிறார். ஆகவே தான் அடுத்த வசனத்தில் **"அவர் பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி, என்னை இரட்சிப்பார்"** என்றும் (வ.3) **"தேவன் தமது கிருபையையும் தமது சத்தியத்தையும் அனுப்புவார்"** என்றும் கூறி தனது பற்றுறுதியை வெளிப்படுத்துகிறதைக் காண்கிறோம். இப்படிப்பட்டக் கதறு தலின் ஜெபமும், தேவன் மீது ஆழ்ந்த பற்றுறுதியுமிருக்கும் போது தேவன் அதிசயத்தைச் செய்ய முன் வருகிறார்.

57ஆம் சங்கீதம் எங்கேதி வனாந்தரத்துக் குகையிலிருக்கும்போது பாடப் பட்டது என்று முன்பு கண்டோம். அந்த சூழ்நிலை 1 சாமு.24ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளதைக் காணலாம். தாவீது என்கேதி வனாந்தரத்திலிருக் கிறான் என்ற தகவலை அறிந்து, சவுல், 3000 தெரிந்து கொள்ளப்பட்ட படை யாட்களுடன் தாவீதைத் தேடிக் கண்டுபிடித்துக் கொன்றழிக்க அங்கு சென்றான். அதே சமயத்தில் கர்த்தர் தாவீதுக்காகச் செயல்பட ஆரம்பித்தார். மரண பயத்தில் அலைந்து திரிந்து கொண்டிருந்த தாவீதையும் அவனைக் கொன்றழிக்கும் வைராக்கியத்தோடு என்கேதி வனாந்திரத்திற்குப் பெரும் படை யுடன் சென்ற சவுலையும் முற்றிலும் மாறான கோணத்தில் இருவருக்கு மிருந்த தீராத பகைமை உணர்வை தேவன் மாற்றுகிறார். அந்தக் காட்சியை நமது மனத்திரைக்கு கொண்டு வருவோம்.

என்கேதி வனாந்தரம், தாவீது மறைந்திருந்த கெபிக்கு அருகாமையில் சவுல் அவனது படையினருடன் நெருங்கி வந்து விட்டான். ஆனால் அந்த கெபியில்தான் தாவீது இருக்கிறான் என்று சவுலுக்குத் தெரியாது. சவுல் அதே குகைக்குள் மலம் கழிப்பதற்காகத் தனியாகச் செல்லுகிறான். மறைந்திருந்த தாவீதும் அவனோடிருந்த மனிதர்களும் சவுலைக் கண்டு கொண்டனர். ஆனால் சவுல் அவர்களைக் காணவில்லை. தாவீதோடிருந்த மனிதர்கள் சவுலைக் கொன்றழிக்க இதுபோன்றதொரு தருணம் இனி கிடைக்காது என

ஆத்திரமடைகின்றனர். ஆனால் தாவீதோ அவர்களைப் பார்த்து "கர்த்தர் அபிஷேகம்பண்ணின என் ஆண்டவன் மேல் என் கையைப் போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காப்பாராக; அவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று சொல்லி (1 சாமு.2:6) அவர்களை அமர்த்திவிட்டு தாவீது மாத்திரம் எழுந்து சவுல் காணாத வண்ண மாக சவுலின் பின்னால் வந்து அவன் சால்வையின் தொங்கலை அறுத்துக் கொண்டான். மறைவாகவே தாவீது கெபிக்குள் சென்றுவிட்டான். சவுல் எழுந்து வெளியே சென்றபோது தாவீது அவன் பின்னாகச் சென்று **"இராஜா வாகிய என் ஆண்டவனே"** (My lord, The king) என்று கூப்பிட்டான். சவுல்திரும்பிப் பார்த்தபோது தாவீது தரைமட்டும் குனிந்து வணங்கி "தாவீது உமக்குப் பொல்லாப்புச் செய்யப்பார்க்கிறான் என்று சொல்லுகிற மனுஷ ருடைய வார்த்தைகளை ஏன் கேட்கிறீர்? (வ.9) இன்று கர்த்தர் உம்மை என் கையில் ஒப்புக் கொடுத்தும் நான் உமக்குத் தீங்கு செய்யவில்லை. **"என் தகப்பனே"** (My Father) (வ.11) என் கையிலிருக்கும் உமது சால்வை யிலிருந்து அறுத்துக் கொண்ட தொங்கலைப் பாரும் என்றான். அப்போதுதான் சவுல் தன்னுடைய சால்வையின் ஓரம் அறுக்கப்பட்டிருப்பதைக் கண்டு வியந்தான். தாவீது சவுலோடு பேசினான். தாவீது பேசி முடித்தபின் **"சவுல் என் குமாரனாகிய தாவீதே"** (My Son, David) நீ என்னைப் பார்க்கிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மை செய்தாய்; நானோ உனக்குத் தீமைசெய்தேன். நீ எனக்கு நன்மைசெய்ததை இன்று விளங்கப்பண்ணினாய்; கர்த்தர் என்னை உன் கையில் ஒப்புக்கொடுத்திருந்தும், நீ என்னைக் கொன்று போடவில்லை" (வ.17,18). மேலும் "இன்று நீ எனக்குச் செய்த நன்மைக்காகக் கர்த்தர் உனக்கு நன்மை செய்வாராக. நீ நிச்சயமாக ராஜாவாய் இருப்பாய் என்றும், இஸ்ரவேலின் ராஜ்ய பாரம் உன் கையில் நிலைவரப்படும் என்றும் அறிவேன்" (வ.19,20). அதன் பின் சவுல் தன் சந்ததியை அழித்துப் போடக் கூடாது என்று கேட்டு தாவீதிடம் ஒரு ஆணையைப் பெற்றுக்கொண்டு சவுல் திரும்பிப் போனான்.

கர்த்தர், சவுலுக்குள்ளிருந்த பகைமையை மாற்றினார். தாவீதுக் குள்ளிருந்த மரண பயத்தை நீக்கினார். தாவீது சவுலை "ஆண்டவனே" என்றும் "தகப்பனே" என்றும் மிகுந்த தாழ்மையோடும் பணிவோடும் அழைத்தான். அது சவுலை "என் குமாரனாகிய தாவீதே" என அழைக்க வைத்தது. பகைமை மாறி "மகனே" என்றழைக்கும் அன்பின் மாற்றம் எவ்வளவு பெரியது என்று பாருங்கள். தாவீது சவுலை அழிக்கவில்லை. சவுல் தாவீதை அழிக்கவில்லை, சவுலின் சந்ததியை அழிப்பதில்லை என்ற தாவீதின் ஆணை இவைகளை எல்லாம் பார்க்கும்போது 57ஆம் சங்கீதத்திற்கு "அல்தஸ்கேத்" (Do not destroy) "அழித்து விடாதீர்" என்ற தலைப்பு எவ் வளவு பொருத்தமானது. மற்றுமொரு தலைப்பு "மிக்தாம்". இச்சம்பவம்

வெட்டெழுத்தால் பதிவு செய்யப்பட வேண்டுமென்பதும் எத்தனை பொருத்த மானது.

நாம் யார் மீதும் பகைமையை மறைத்து வைத்திருக்கிறோமா? (Are we harbouring hatred against anybody?) மற்றவர்கள் பகைமையினால் மரண பயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோமா? தாவீதின் தாழ்மையின் காரணமாக சவுலின் பகைமையை மாற்றிய ஆண்டவர் நமக்கும் செய்வார். ''உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும்'' (சங்.143:10) என்று கேட்டுப் பெற்றுக் கொள்வோம். ஆண்டவர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்வார்.

இயேசுவின் பணியில், K.செல்வின் தங்கதுரை

## இயேசுவை சந்திக்க உனக்கு பயமா?

மிகுந்த தாழ்மையும், ஊழியத்தில் மிகுந்த அர்ப்பணிப்புமுள்ள ஒரு பாஸ்டரின் மகன் திடீரென்று வியாதிப்பட்டான். பாஸ்டர் அவனை மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றார். மகனை பல்வேறு மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தினார்கள். முடிவில் அவனுக்கு மரணத்திற்கு ஏதுவான வியாதியால் (Terminal illness) பெரும்பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று மருத்துவர் சொன்னார். பாஸ்டர் அதிர்ச்சியடைந்தார். மகன் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட்டவன்தான், மரணம் அவனுக்கு மகிமை நிறைந்ததாய் இருக்கும் என்ற நிச்சயம் அவருக்கு இருந்தது. எனினும் இச்செய்தியை அவனுக்கு எப்படிச் சொல்வது என்று திகைத்தார். பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு தைரியத்தை வருவித்துக்கொண்டு கனத்த இருதயத்தோடு அவனது அறைக்குச் சென்றார். சென்றவர் அறைக்குச் செல்ல தயங்கினவராய் வராந்தாவில் அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்தார். பின்னர் மகனுடைய படுக்கையின் அருகே முழங்கால் படியிட்டு, அன்பு மகனுக்கு சில வேதப்பகுதிகளை வாசித்துக் காட்டினார். உருக்கமாக மகனுக்காக ஜெபித்தார். பின்னர் மெல்லிய குரலில் ''மருத்துவர்கள் ஒரு வேளை நீ சிலநாட்கள் மாத்திரமே ஜீவனோடு இருப்பாய் என்று சொன்னால் இயேசுவை சந்திப்பதற்கு உனக்கு பயமாக இருக்குமா?'' என்று கேட்டார். கண்களில் தேங்கிய கண்ணீரை அடக்கிக் கொண்டு ''இல்லை அப்பா, எனக்குப் பயமில்லை. உங்களைப்போலவே எனக்கு அன்புகாட்டும் பரலோக அப்பாவிடம் சதாகாலமும் வாழச் செல்லுகிறேன்'' என்று தைரியமாகப் பதில் அளித்தான். ''ஆண்டவரே, இந்த சிறுவயதிலும் அவனை உம்மோடிருக்க தெரிந்துகொண்டு அவனுடைய இருதயத்தைப் பக்குவப்படுத்தி இரட்சித்தீரே, உமக்கு ஸ்தோத்திரம்'' என்று அப்பா மனநிறைவோடு பெருமூச்சுவிட்டார். ●

நன்றி: "The Speaker`s Quote Book" Roy B.zuck

**''பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்''**
**(Father, into your hands I commit my spirit) (லூக்.23:46).**

# உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ்

இந்த ஆண்டு ஜனவரி தொடங்கி 12.2.2020க்குள்ளாக சீனாவில் கொரோனா வைரஸ் என்ற ஆட் கொல்லி தொற்று நோயால் ஆயிரத் துக்கும் மேற்பட்டோர் மரணமடைந் துள்ளனர். சுமார் 50,000க்கும் மேற்பட்டோர் இத்தொற்று நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரு கின்றனர். சீனாவிற்கு வெளியே உள்ள நாடுகளில் 240பேர் இந்த நோயால் இறந்துள்ளனர். மேலும் இது கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு பாதிப்பை உண்டாக்கிக் கொண்டே இருக்கிறது. இந்த நோயைக் குறித்த மூலகாரணத்தை இதுவரை அறிய முடியாததால் குணப்படுத்துவதற் கான மருந்தும் கண்டுபிடிக்க முடிய வில்லை. பாதிக்கப்பட்டவர்களின் சுவாசத்தின் மூலம் குறிப்பாக இருமும்போது அல்லது தும்மும் போது வேகமாக வரும் சுவாசத்தின் மூலமாகவும், அதிலிருந்து தெறிக்கும் எச்சில் மூலமாகவும் இது பரவுகிறது என்று தெரிய வந்தபடியால் மூக்கை மறைத்து மூடி அணிந்து கொள்வது (Anti-Virus Mask) பாதுகாப்பாக யிருக்கும் என்ற ஆலோசனைப்படி சீனாவில் மக்கள் மூக்கை மறைத்து மூடி அணிந்து கொள்கின்றனர். தற்போது அந்த மூக்கு மூடியும் போது மான அளவு விநியோகம் இல்லாத தால் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. மக்கள் அதினால் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். அதை வாங்க கடைகளைத் தேடிக் கண்டுபிடித்து வாங்குவதற்கு நீண்ட வரிசைகளில் நிற்கின்றனர். கொரோனா வைரஸ் தற்போது ஹாங்காங், ஜப்பான் போன்ற இடங்களுக்கும் பரவியிருக் கிறதாகச் சொல்லப்படுகிறது. சீனா வில் உள்ள வெளிநாட்டினரை அவர் களுடைய உயிர் பாதுகாப்பு கருதி அந்தந்த நாட்டு அரசு, விமானங்களை அனுப்பி சொந்த நாட்டிற்கு வர வழைத்து கொண்டு இருக்கின்றனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பிற் பகுதியில் சீனாவின் ஊஹான் நகரி லுள்ள லீ வென்லியாங் என்ற டாக்டர் தான் முதல்முறையாக இப்படியொரு நூதனமான தொற்றுநோய் பரவு கிறது என்றும் அதன் விளைவுகள் மிகப்பயங்கரமாக உருவெடுக்கும் என்றும் சமூக வலைத்தளம் மூல மாக அறிவித்தார். ஆனால் அவர் பொய் வதந்திகளைப் பரப்பி சமுதா யத்தில் அச்சத்தை உருவாக்குகிறார் என்ற குற்றச்சாட்டில் அரசு, காவல் துறை மூலமாக அவர் மீது நட வடிக்கை எடுத்தது. ஆனால் அந்த டாக்டரும் அதே நோயால் பாதிக்கப் பட்டு மரணமடைந்தார். அதன் காரணமாக முன்னெச்சரிக்கை செய்த அவரை சரியாக புரிந்து கொள்ளாமல் நடவடிக்கை எடுத்த காவல்துறையினர் மன்னிப்பு கேட்க வேண்டுமென்று அதிருப்தியடைந்த மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

அனைத்து உலகநாடுகளுக்கும் கொரோனா வைரஸ் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது என்று உலக சுகாதாரத் தலைவர், மூத்த அதிகாரிகளுடன் சீன அதிபர் ஜி ஜின்ங்க், பெய்ஜிங்கில் 28.1.20 அன்று ஆலோசனை நடத்தினார். அப்போது அதிபர் கூறும்போது **"கொரோனா வைரஸ் ஒரு பிசாசு, அந்த பிசாசு எங்கும் ஒளிந்து கொள்ள அனுமதிக்கக் கூடாது. வைரஸ் பாதிப்பு குறித்த தகவல்களை உலகநாடுகளுக்கு ஒளிவு மறைவின்றி தெரிவிப்போம்"** என்றார் (தமிழ் இந்து 29.1.20).

**இஸ்ரேல் விஞ்ஞானிகள் கருத்து**

கொரோனா வைரஸ் தொற்று நோய், வௌவால், பாம்பு இவைகளைச் சாப்பிடுவதினால் ஏற்படுகிறது என்று ஓர் அபிப்பிராயம் தெரிவித்திருந்தாலும் இவைகளை அவர்கள் இன்று நேற்றல்ல தொன்றுதொட்டு சாப்பிட்டு வருகின்றனர். ஆகவே அதை ஏற்றுக் கொள்ளகூடிய காரணமாக இல்லை. ஆனால் இதற்கான காரணத்தை இஸ்ரேல் தேசத்தைச் சார்ந்த விஞ்ஞானிகள் தெளிவுபடுத்தியிருப்பதாக "தாவீதின் கூடார ஊழியங்கள்" (David Tabernacle Ministries) என்ற அமைப்பிலுள்ள தேவ ஊழியர் தந்திருக்கும் தகவல் ஆச்சரியமளிக்கிறது. சீனா தேசம், வரவிருக்கும் மூன்றாம் உலக யுத்தத்தை சந்திக்க வைரஸ் மூலமாக பேரழிவை உண்டாக்கும் "பையோ குண்டு" (Bio Bomb) (உயிர் பொருட்கள் சார்ந்த) தயாரிக்கும் முயற்சியில், பரிசோதனைக் கூடத்தில் பரிசோதனை செய்தபோது, அவைகள் காற்றில் கலந்துவிட்டதின் விளைவு தான் இந்த கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு காரணம் என்று அறிவித்துள்ளனர். அந்த செய்தி உண்மையாக இருக்குமானால் முழு மனுக்குலத்திற்கும் பேரழிவை உண்டாக்கும் கொடிய கொலைக் கருவிகளை உருவாக்கும். தேசத் தலைவர்களை ஆண்டவர் உணர்த்த வேண்டும், மனிதநேயம் உருவாக்கப்பட வேண்டும். தேசத்தலைவர்களுக்காக நாம் தேவ சமுகத்தில் மன்றாடக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இணையதளத்தில் மற்றுமொரு செய்தியும் அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது. சீன அதிபர் "நான் வேதாகமத்தையும் குரானையும் சோசியலிச கோட்பாடுகளுக்கு ஏற்ப திருத்தி எழுதப் போகிறேன்" (I am going to rewrite Bible and koran in line with the principles of Socialism) என்ற ஓர் அறிக்கையைக் வெளியீட்டுள்ளார். "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (All Scripture is given by inspiration of God. (Inspiration = God Breathed) 2 தீமோ.3:16. வேறு விதமாகச் சொன்னால் தேவனுடைய சுவாசம் ஊதப்பட்ட வார்த்தைகள். ஆகவேதான் யோவான் அப்போஸ்தலர் **"ஜீவனுள்ள**

**வார்த்தை"** என்றும் **"நித்திய ஜீவனுள்ள வார்த்தை"** என்றும் (1 யோவா.1:1,2), எபிரேய நிரூப ஆக்கியோன் **"ஜீவனும் வல்லமையுமுள்ள வார்த்தை"** என்றும் (எபி.4:12) சொல்லுகிறார்கள். **"வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"** (மத்.5:18)இல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தமது வாயிலாக தமது மலைப் பிரசங்கத்தில் சொல்லுகிறார். அப்படிப்பட்ட தனித்தன்மை வாய்ந்த ஆண்டவருடைய வார்த்தையை யாராலும் மாற்ற கூடாது. அப்படிச் செய்யத் துணிகிறவர்களுக்கு ஆண்டவர் ஒரு கடும் எச்சரிக்கையைக் கொடுக்கிறார். வேதாகமத்தின் கடைசி புத்தகத்தின் கடைசி அதிகாரத்தில் "இந்த புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: **"ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார்"** என்று கூறப்பட்டுள்ளது(வெளி.22:18,19). ஆகவே இந்த வாதை தேவ கோபாக்கினையாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. எனினும் இது ஒரு எச்சரிக்கை என்பதை யாவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். அப்படியானால் கொரோனா வைரஸ்ஸில் மரித்தவர்கள் எல்லாம் பாவிகளா என்ற கேள்வி எழக்கூடும். அப்படி அல்ல. ஆண்டவராகிய இயேசுவினிடத்தில், சிலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுபேர் கொல்லப்பட்ட சம்பவத்தைச் சுட்டிக்காட்டி, எருசலேமிலுள்ளவர்களில் அவர்கள் பாவிகளா என்ற கேள்வியை எழுப்பினார்கள். அதற்கு அவர் **"அப்படியல்லவென்று உங்களுக்கு சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள் என்றார்"** என்ற பதிலைக் காண்கிறோம் (லூக்.13:5). ஆகவே மனந்திரும்பாத மக்களுக்கு இதுபோன்ற அழிவுச் சம்பவங்கள் எச்சரிக்கையாயிருக்கின்றன. நாட்டை ஆளும் தலைவர்கள் மக்கள் வழிபடும் தெய்வத்தை அறிந்து மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். தலைவர்களின் நடக்கையால் மக்கள் பாதிப்புக்குள்ளாகக் கூடாது என்பதை உணரவேண்டும். மெய்யான தெய்வத்தை அடை

யாளம் கண்டு அவரை அண்டிக் கொள்ள கற்றுக் கொள்ளவேண்டும்.

### நான்தான் பாவஞ் செய் தேன்... இந்த ஆடுகள் என்ன செய்தது?

தாவீது இராஜாவின் வாழ்க் கையில் நடந்த ஒரு சம்பவத்தை இந்தப் பின்னனியத்தில் நினைவு கூறுவது நல்லது. இஸ்ரவேல் தேசத்தில் தாவீது இராஜாவின் ஆளுகையின் போது மக்கட்தொகை கணக்கிடக் கட்டளையிட்டான். அவனுடைய படைத்தளபதி யோவாப், ஆண்டவர் மக்களின் பெருக்கத்தைத் தருகிறார், நாம் ஏன் இலக்கம் பார்ப்பானேன்? என்றான். ஆனாலும் அவன் ஆலோசனை எடுபடவில்லை. தாவீது அப்படிச் செய்ததில் கர்த்தர் பிரியப்பட வில்லை. கர்த்தர் தீர்க்க தரிசியாகிய காத் மூலமாகத் தாவீது சந்திக்க இருக்கும் தண்டனையைத் தெரி வித்தார். ‘‘உம்முடைய தேசத்திலே ஏழு வருஷம் பஞ்சம் வர வேண்டுமோ? அல்லது மூன்று மாதம் உம்முடைய சத்துருக்கள் உம்மைப் பின்தொடர, நீர் அவர் களுக்கு முன்பாக ஓடிப்போக வேண்டுமோ? அல்லது உம் முடைய தேசத்திலே மூன்று நாள் கொள்ளைநோய் உண்டாக வேண்டுமோ?’’ இதில் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றார் (2 சாமு.24:13). அப்போது தாவீது **‘‘மனுஷர் கையில் விழா திருப்பேனாக. நாம் கர்த்தர் கையில் விழுவோமாக. அவருடைய இரக் கங்கள் மகாபெரியது’’** என்றான் (வ.14). இஸ்ரவேல் மக்கள் எழுபதினா யிரம் பேர் கொள்ளை நோயில் செத்துப் போனார்கள். உடனே தாவீது அதற்காக மனஸ்தாபப்பட்டு இரக்கத் திற்கு கெஞ்சினான். சங்கரித்த தூதனை நிறுத்தும் படிக் தேவன், தூதனுக்கு கட்டளையிட்டார். தலை வனின் தவறான முடிவு எப்படி மக்களைப் பாதிக்கிறது என்று பாருங்கள். அப்பொழுது தாவீது ‘‘கர்த்தரை நோக்கி: இதோ, நான்தான் பாவஞ்செய்தேன்; நான் தான் அக்கிரமம் பண்ணினேன்; இந்த ஆடுகள் என்னசெய்தது? உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டுக்கும் விரோதமாயிருப்பதாக என்று விண்ணப்பம் பண்ணினான்’’ (வ.17) தன் பாவங்களை ஒப்புக் கொண்டு அதற்குண்டான தண்டனை தன்மேல் வரட்டும் என்று ஜெபிக்கும் நற்பண்பைப் பாருங்கள். **தவறு களை ஒப்புக்கொண்டு அவற்றைச் சீர்படுத்திக் கொள்ளும் தேசத்தலை வர்கள் நம்முடைய தேசத்திற்குத் தேவை... அதற்காக ஜெபிப்போம்.**

கடைசி கால அடையாளங்களை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பட்டியலிட்டுக் காட்டும்போது **‘‘கொள்ளை நோய்கள்...பல இடங் களில் உண்டாகும்’’** என்பதை மத்.24:7; லூக்.21:11 ஆகிய வேத பகுதியில் குறிப்பிட்டுள்ளார். இவைகள் (அடையாளங்கள்) சம்ப

விக்கிறதை நீங்கள் காணும் போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்'' என்று சொல்லியிருக்கிறார் (மாற்.13: 29). ஆகவே அவர் இப்பொழுது வாசலருகே வந்துவிட்டார். லூக்கா சுவிசேஷகன் இதை எச்சரிக்கையாகக் கொடுத்திருக்கிறார். ''மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்'' (லூக்.21:36). எச்சரிக்கையடைவோம், உணர்வடைவோம், ஆயத்தமாவோம். எதிர்பார்ப்போம்●

## சீனக் கிறிஸ்தவர்களின் முழக்கம்

சீனாவில் கிறிஸ்தவர்கள் இப்படி ஒரு முழக்கத்தைச் சொல்கிறார்கள்:

''என்னைச் சிறையில் போட்டால், நற்செய்தியை சொல்வதற்கு என்னை அனுப்புகிறீர்கள்''.

''என்னைத் தனிச்சிறையில் அடைத்து வைத்தால், நான் வேதத்தை தியானிப்பதற்கும் ஜெபிப்பதற்கும் எனக்கு உதவுகிறீர்கள்''.

''என்னை அடித்தால், நான் தேவனை மகிமைப்படுத்த அனுமதிக்கிறீர்கள்''.

''எனது வீட்டையோ, பண்ணையையோ பறித்துக்கொண்டால், நான் எங்கு வேண்டுமானாலும் சென்று நற்செய்தியை அறிவிக்க என்னை விடுதலையாக்குகிறீர்கள்''.

''என்னைக் நீங்கள் கொன்றால், நான் தேவனுடைய மகிமைக்குள் செல்ல என்னை அனுப்புகிறீர்கள்''.

(In China Christians have a slogan that goes like this: "If you imprison me, you free me to share the gospel openly. If you put me in solitary confinement, you enable me to meditate on scripture and to pray. If you beat me, you allow me to glorify God. If you seize my home or farm, you are freeing me to travel widely to spread the gospel. If you kill me, you are sending me to glory).

Master Trainers Manual Page.257

created by TTI Leaders (The Themothy Initiative)12.7.18 / revised 1.1.20

●

## சத்தியம் என் துணைப்பெயர்

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சமூக பழக்கத்திற்கும் மாறாக சத்தியத்தையே தமக்கு துணைப்பெயராக்கிக் கொண்டார் (Our Lord Jesus Christ has surnamed Himself Truth, not custom).

Tertullian A Christian historian (150-229 AD)

# கிறிஸ்தியானின் மோட்சப்பிரயாணம்

**பாகம்-8**

கிறிஸ்தியான், அப்பொல்லியானை எதிர்த்துக் கடுமையாகப் போராடி வெற்றி கொண்டான். அந்த போராட்டத்தில் காயமுற்றான், மிகவும் களைத்துப்போனான். எனினும் தேற்றும் கரம் ஒன்று வந்து ஒரு மரத்தின் இலைகளைக் கொண்டு காயங்களைக் கட்டியது. அவன் சுகம் பெற்றான். அலங்கார மாளிகையில் சகோதரிகள் கொடுத்த அப்பத்தையும், திராட்சரசத்தையும் உண்டு பெலப்பட்டான். அதைத் தொடர்ந்து மரண இருளின் பள்ளத் தாக்கை (Valley of the shadow of death) கடந்து செல்லக் காலடி வைத்தான் என்று கடந்த இதழில் (பிப்.2020) கண்டோம்.

**மரணஇருளின் பள்ளத்தாக்கு**

கிறிஸ்தியான் தன்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கைப் பயணத்தில் முன்னேறிச் சென்றாலும் பயணம் மிகக் கடினமாகவும் ஆபத்து நிறைந்ததாகவும் மாறியது. இப்பொழுது அவனுக்கு முன்பாக மரண இருளின் பள்ளத்தாக்கு உள்ளது. அதைக் கடந்து செல்ல வேண்டும். அதில் இறங்கிச் செல்ல ஆரம்பிக்கிற வேளையில் இரண்டு பேர் மரண இருளின் பள்ளத் தாக்கை விட்டு பதறிப்போய் வெளியே வந்ததைக் கண்டான். “நல்ல வேளை நாங்கள் தப்பிப் பிழைத்தோம். அதற்கு மேல் சென்று இருந்தால் மரணம் நிச்சயம் தான். இந்தப்பாதையில் போகாதீர்கள்” என்று மிகுந்த பதட்டத்தோடு பேசினார்கள். “நீங்கள் அங்கே போகாதீர்கள்” என்று மீண்டும் சொல்லி கிறிஸ்தியான் போவதையும் தடுத்தனர். ஆனால் இந்த வழியைக் கடந்து சென்றாலொழிய பரலோகப் பட்டணத்தைச் சென்றடைய வேறு வழியில்லை என்பதை கிறிஸ்தியான் அறிந்திருந்தான். ஆகவே அந்த இருண்ட பாதையில் தனிமையில் கடந்து செல்வதற்குத் தீர்மானமாகயிருந்தான்.

அந்த பள்ளத்தாக்கு இருளும் திகிலும் நிறைந்த இடம். பாதையும் மிகவும் இடுக்கமானது. அந்த இடுக்கமான பாதையின் ஒருபக்கம் அகாதமான பாதாளமாக இருந்தது (ஆழத்தை கண்டறியமுடியாது) மறுபக்கம் சதுப்பு நிலமாகக் காட்சியளித்த ஆழமான, உளையான சேராக இருந்தது. அதில் விழுந்தவர்கள் மீளமுடியாது. இவற்றிற்கெல்லாம் மேலாக அச்சுறுத்தும் ஊளை சத்தமும் நரகத்தில் வந்து சிக்கிக் கொண்டோமோ என்று உணர்வு ஏற்பட்டது. அது நரகத்திற்குச் செல்லும் வழியாக இருந்தது. அருவருப்பாக காட்சியளிக்கும் ஒருவகை மிருகத்தின் (Hobgoblin) அச்சுறுத்தும் உருமல்கள் நிறைந்த இடமாக இருந்தது.

கிறிஸ்தியான் இந்தச் சூழ்நிலைகளைக் கண்டு அஞ்சினாலும் அவன் கையிலிருந்த பட்டயத்தை இறுகப் பற்றிக் கொண்டான். ஆனால் தனக்கு எதிரான சத்துருக்கள் யாரும் இல்லை என்று உணர்ந்ததால் பட்டயத்தை உறையில் போட்டுக் கொண்டான். ஆனால் அவன் வேறு ஒரு ஆயுதத்தை எடுத்துக் கொண்டான். அதுதான் சத்தமான ஜெபம். ஆண்டவருடைய வார்த்தை மிகுந்த சத்தமாக சொல்ல ஆரம்பித்தான். **“நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடு கூட இருக்கிறீர்”** என்பதைத் திரும்ப திரும்பச் சொன்னான். இந்த ஜெபத்தை எழுதிய தாவீது உளையான சேற்றில் சிக்கியவன். ஆனால் அவனுடைய எஜமானாகிய கர்த்தர் அவனது கரத்தைப் பற்றித் தூக்கி எடுத்து கன்மலையின் மேல் நிறுத்தினார். அவன் நன்றியோடு அதைப் பாடலாக்கிப் பாடினான். அதையே முன் மாதிரியாக நிறுத்திக் கொண்டு கிறிஸ்தியானும் அதைத் திரும்பப்பாடினான்.

கடைசியாக நீண்ட பயணத்திற்குப் பின் கிறிஸ்தியான் மரணஇருளின் பள்ளத்தாக்கின் மறு எல்லையைச் சென்றடைந்தான். அவன் ஏறி வெளியே வரும்போது சூரியன் உதித்து எழுந்தது. அவன் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தான். இடுக்கமான அந்தப் பாதையில் தன் கால்கள் வழுவாமல் பள்ளத்தாக்கில் விழுந்துவிடாமல் ஆண்டவர் தன்னைப் பாதுகாத்து நடத்திவந்த வழிகளை நினைந்து மிகுந்த ஆச்சரியப்பட்டான்.

தேவனை நன்றியோடு துதித்துக் கொண்டே பயணத்தைத் தொடர்ந்தான். மேடான இடத்திலிருந்து சுற்றிலும் பார்த்தான். அப்போது சற்றுத் தொலைவில் உண்மையானவன் (Faithful) நடந்து செல்வதைக் கண்டான். அவன் அழிவின் நகரத்தில் (City of Destruction) தன்னுடைய பக்கத்து வீட்டிலிருந்தவன். கிறிஸ்தியான் அவனைச் சத்தமிட்டு அழைத்தான். துரிதமாக ஓடி அவனோடு போய் சேர்ந்து கொண்டான். பரலோக நகரை நோக்கிப் பயணிக்கும் இந்தப் பாதையில் தனக்கு ஒரு கூட்டாளி கிடைத்து விட்டான் என்று எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். கிறிஸ்தியான் அவனிடம் அவனுடைய குடும்பத்தாரைக் குறித்தும் கடின நெஞ்சன் (Stubborn) இளகிய நெஞ்சன் (Pliable) ஆகியோரைக் குறித்தும் விசாரித்தான். அவர்கள் இன்னும் அழிவின் நகரத்தில் தான் அவர்களுடைய வழியின்படியே தான் வாழுகிறார்கள். அழிவின் நகரம் ஒருநாள் முற்றுமாக அழிந்து போகும் என்பதை நம்பாமலேயே இருக்கிறார்கள் என்பதைக் கேட்டு மிகவும் ஏமாற்றமடைந்தான்.

கிறிஸ்தியான் தான் கடந்து வந்த கொடிய பாதைகள், தான் சிக்கிக் கொள்ள ஏதுவாயிருந்த பொறிகள்,

சோதனைகள் எல்லாவற்றையும் உண்மையானவனோடு பகிர்ந்து கொண்டான். உண்மையானவன் அவன் கடந்து வந்த பாதைகளைக் குறித்துப் பகிர்ந்து கொண்டதையும் கவனமாகக் கேட்டறிந்தான். உண்மையானவன் கிறிஸ்தியானைப்போல அவநம்பிக்கை எனும் குட்டையில் (Slough of Despond) சிக்கிக் கொள்ளாமலும் உலக ஞானியின் (World Wisdom) ஆலோசனையால் ஏமாற்றப்படாமலும் தப்பித்துக் கொண்டவன். வழியில் வஞ்சகி (wanton) என்ற பெண்ணைச் சந்திக்க நேர்ந்ததாகவும் தான் கண்களை மூடிக்கொண்டு சோதனையை மேற்கொண்டு அவளது வஞ்சக வலையில் சிக்கிக் கொள்ளாமல் தப்பித்துக் கொண்டதைக் குறித்துச் சொன்னான். பின்னர் முதலாம் ஆதாம் (First Adam) என்பவன் தன்னை சந்தித்து வஞ்சிமா நகரிலுள்ள (Town of Deceit) அவனுடைய வீட்டிற்கு அழைத்து தன்னோடு வந்து வாழும்படியும் தனக்கு இரண்டு மகள்கள் இருப்பதாகவும் சகல உலக இன்பங்களையும் தருவதாகவும் ஆசைகாட்டி அழைத்தான். நானும் அவனது பேச்சுக்கு இசைந்து அவனது கூடப்போனேன். ஆனாலும் தன்னுடைய தவறை உணர்ந்தவனாக தன்னை விடுவித்துக் கொண்டு முதலாம் ஆதாமிடமிருந்து ஓடி வந்துவிட்டேன் என்றான். கண்களின் இச்சைக்கும், மாம்சத்தின் இச்சைக்கும், ஜீவனத்தின் பெருமைக்கும் தப்பி மேலான காரியங்களில் நம்பிக்கை வைத்து தப்பினேன் என்றான். பயணத்தைத் தொடர்ந்த போது என்னை ஒருவன் வழிமறித்து என்னைச் சரமாரியாக சாட்டையால் அடிக்க ஆரம்பித்தான். பின்னர் அவன் மோசே என்னும் நியாயப் பிரமாணம் (Moses, the law) என்று விளங்கிக் கொண்டேன். **நியாயப் பிரமாணத்தில் மன்னிப்பு இல்லை. ஆனால் இயேசுகிறிஸ்துவின் பிரமாணத்தில் மன்னிப்பு உண்டு**. ஏனெனில் அவரால் நாம் இரக்கத்தையும், கிருபையையும் பெற்றுக் கொள்ளுகிறோம். அதையும் தாண்டி தான் பயணித்துக் கொண்டிருக்கும் போது வெட்கம் (Shame) என்பவன் என்னைப் பின் தொடர்ந்து வந்தான். தான் செல்லும் பயணத்தை கைவிடும்படியும், ஆண்டவரிடத்தில் மன்னிப்பு கேட்பது இழிவான காரியம் என்று சொல்லியும், தன்னை தைரியப்படுத்தினான் என்றான். எனினும் எல்லாவற்றையும் மேற்கொண்டு பயணத்தைத் தொடர்ந்தான். உண்மையானவனின் அனுபவங்களைக் கேட்டு கிறிஸ்தியான் உற்சாகமடைந்தான். ஆண்டவர் ஒவ்வொருவரையும் வித்தியாசமான வழியில் நடத்துகிறார். அவர்களுடைய பயணத்தில் கூடயிருக்கிறார்.

**நாம் கற்றுக்கொள்வது**

கிறிஸ்தியான் மூலம் நாம் கற்றுக் கொள்ளும் மிக முக்கியமான பாடம் என்னவெனில் கிறிஸ்தவ வாழ்க்கையில் முதிர்ச்சியை அடைந்து

கொள்ள வேண்டுமெனில் எந்த பிரச் சனையில் எந்த ஆயுதத்தை எப்பொழுது பயன்படுத்த வேண்டும் என்ற பகுத்தாயும் அறிவை நாம் பெற்றுக் கொள்வது இன்றியமையாத தாகும்.

இரண்டாவதாக, கிறிஸ்தவப் பயணத்தில் குறிப்பாக மரண இருளில் பள்ளத்தாக்கைக் கடந்து செல்லும் போது ஆண்டவரும் நம்மோடு சேர்ந்து நடந்து வருகிறார். வேறு யாரும் நம்மோடு வருவதில்லை, எப்போதும் "நானும் என் ஆண்டவரும்" என்ற உணர்வோடு நாம் பயணிக்க வேண்டும். அவர் ஒரு போதும் நம்மைத் தனிமையில் விடுவதில்லை. கிறிஸ்தியான் மரண இருளின் பள்ளத்தாக்கைக் கடந்து வந்தவுடன் உண்மையானவன் (Faithful) என்பவனை அவனோடு பயணத்தில் துணையாக ஆயத்தப் படுத்தி அனுப்புகிறார்.

மூன்றாவதாக ஒவ்வொரு கிறிஸ்தவனின் பயணமும் ஒன்றுபோல் இருப்பதில்லை, உண்மையுள்ளவனும் கிறிஸ்தியானும் ஒரே இலக்கை நோக்கித் தான் பயணித்தார்கள். ஆனால் அவரவர்கள் சந்தித்த பிரச்சனைகள், சோதனைகள் தனித்தனி அனுபவங்களாகவே இருந்தன. வழியில் அவர்கள் சந்தித்த மனிதர்கள் முற்றிலும் வேறுபட்டவர்கள். ஆனால் ஆண்டவருடைய பிரசன்னமும் அவருடைய வழி நடத்துதலும் பரிசுத்த ஆவியான வரின் நடத்துதலும் செயல்பாடும் நிச்சயமாக வித்தியாசமானவைகள். ஆகவே மற்றவர்களின் வழிகளோடும் அவர்கள் நடத்தப்படும் வழிகளையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாம். நம்முடைய ஜீவியத்திற்கும் நமக்கு அவர் அருளும் அனுபவத்திருக்கும் ஆண்டவர் போதுமானவராயிருக்கிறார். ●

- தொடரும்

**சகோ. லாரா டெலனோ** lauradelano@yahoo.com

## கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் மன்னியுங்கள்

**(கொலோ.3:13)**

E.L.ஹேமில்டன் ஓர் நல்ல தேவ ஊழியக்காரர். ஒருநாள் தன்னோடு ஊழியம் செய்து கொண்டிருந்த ஒரு சகோதரி விசுவாசி பெண்மணியிடம் தனது மன்னிக்க முடியாத சுபாவத்தை மிகக் கடுமையாக வெளிப்படுத்தினார், இதைக்கண்ட மூத்த ஊழியக்காரராகிய ஹேமில்டன் அந்த சகோதரியை மிகவும் கண்டித்தார். அதற்கு அந்த சகோதரி "உங்கள் ஆலோசனைப்படி அப்பெண்மணியை மன்னிக்கிறேன். ஆனால் இனிமேல் அவளோடு எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளமாட்டேன்" என்று பிடிவாதமாகப் பதில் அளித்தார். அதற்கு ஹேமில்டன் "இதே பதிலை ஆண்டவர், உனக்கு மன்னிக்கிறேன். ஆனால் இனிமேல் உனக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொல்லுவாரானால் உன்னால் ஏற்றுக்கொள்ள முடியுமா?" என்று கேட்டார். அந்த கேள்வி அந்த சகோதரியை அசைத்தது. மேலும் "இயேசு மன்னிப்பாரானால், மன்னித்த பாவங்களை நித்திய மறதி (Everlasting forgetfulness) என்ற கடலில் ஆழத்தில் போட்டு விடுகிறார் என்பதை எப்போதும் நீ நினைவில் கொள்ள வேண்டும்" என்பதை வலியுறுத்திச் சொன்னார். நன்றி: **"The Speaker`s Quote Book"- Roy B.zuck** ●

# குடியுரிமை

சமீபநாட்களாக CAA (Citizenship (Amendment) Act), NRC(National Register of Citizens), NPR(National Population Register) என்ற "குடியுரிமை" சம்பந்தமான பிரச்சனையில் நாடே கதி கலங்கியிருக்கிறது. குடியுரிமை திருத்தச் சட்டத்தின்படி நமது நாட்டில் இப்பொழுது இருப்பவர்களில் எவ்வளவு பேர் இந்தியக் குடிமகனாகத் தொடரும் தகுதியுள்ளவர்களாக இருப்பார்கள், எவ்வளவு பேர் தகுதியை இழப்பார்கள் என்பது கேள்விக் குறியாக உள்ளது. இதை நடைமுறைப்படுத்துவதும் அரசாங்கத்துக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கும். அரசியல் கட்சிகள், சமூக ஆர்வலர்கள், மற்றும் பத்திரிக்கையாளர்களின் ஒட்டு மொத்தக் கருத்தாக இருக்கிறது. இந்தச் சட்டம் ஒரு பிரிவினருக்கு மட்டுமல்ல; ஒட்டு மொத்த இந்தியருக்கே சிக்கலை உண்டு பண்ணும் என்று அஞ்சுகின்றனர். இதையடுத்து எங்கும் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், தன்னார்வ அமைப்புகள், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் மாணவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றனர். தலைநகர் டெல்லியில் உள்ள ஷாகின் பாக்கில் இந்தச் சட்டத்தை எதிர்த்து கடந்த டிசம்பர் மாதம் 15ஆம் தேதியிலிருந்து போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அரசாங்கத்திற்குப் பெரும் தலைவலியாக மாறியிருக்கிற இந்த சமூகப் பிரச்சனை தான் என்ன?

### திருத்தப்பட்ட குடியுரிமைச் சட்டம் என்றால் என்ன?

பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய இஸ்லாமிய நாடுகளில் துன்புறுத்தலுக்கு ஆளாகி இந்தியாவில் குடியேறியுள்ள சிறுபான்மையினரான இந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள், பௌத்தர்கள், பார்சிகள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வழிவகை செய்கிறது.

### தேசிய குடிமக்கள் பதிவேடு என்றால் என்ன?

சட்ட விரோதமாக இந்தியாவில் குடியேறியவர்களை சாதி, மத, ஏழை, பணக்காரன் என்ற அடிப்படையின்றி கண்டறிந்து அவர்களை வெளியேற்றுவது அல்லது முகாமில் அடைப்பது.

### தேசிய மக்கள் தொகைப் பதிவேடு என்றால் என்ன?

இந்தியாவில் உள்ள மொத்த மக்கள் தொகையை கணக்கெடுப்பது. ஒவ்வொரு பத்தாண்டுக்கு ஒரு முறை இந்த கணக்கெடுப்பு நடைபெறுகிறது. 1872இல் முதலாவது கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. 2021இல் எடுக்கப் போவது 16ஆவது கணக்கெடுப்பாகும்.

**CAA, NRC, NPR இவைகளை செயலாக்கத்திற்குக் கொண்டு வரும்போது உள்ள நடைமுறை சிக்கல்கள் என்ன?**

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 5, 10, 14 மற்றும் 15வது பிரிவுகள்... சமத்துவம், மதம், இனம், சாதி, பாலினம், பிறந்த இடம் அல்லது அவற்றில் ஏதேனும் ஒரு அடிப் படையில் மக்களை பாகுபடுத்து வதற்கு எதிராக பாதுகாப்பை உறுதி செய்கிறது. நடைமுறையில் தேசிய குடியுரிமைச் சட்டத்தை அமல் செய்யும்போது, அரசியலமைப்பின் மேற்கண்ட பிரிவுகளுக்கு, இவைகள் எதிராக உள்ளதாக அரசியல் நோக் கர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் எதிர்க்கட்சிகள் பயப்படுகின்றனர். தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்து கின்றனர். குடியுரிமையை நிரூபிப் பதற்கான ஆவணங்கள் எல்லோர் இடமும் இருக்குமா என்பது கேள்விக் குறியாக இருக்கும் என்று ஐயப்படு கின்றனர்.

**ஒருவர் இந்தியக் குடிமகன் என் பதை நிரூபிக்க கீழ்க்கண்ட ஐந்து வழிகள் உள்ளன.**

1. பிறப்பின் அடிப்படை (Citizenship by Birth)
2. வம்சாவழியின் அடிப்படை (Citizenship by Descent)
3. பதிவு செய்யப்படுவதின் அடிப் படை (Citizenship by Registration)
4. இயல்பாக்கத்தின் அடிப்படை (Citizenship by Naturalization)
5. குறிப்பிட்ட பகுதி இந்தியா வுடன் இணைவதன் மூலம் (Citizenship by incorporation of Territory)

மேற்கண்ட ஆவணங்களின் அடிப்படையில் இந்தியாவில் வாழும் ஒருவர் இந்தியக் குடிமகனாகிறார். கடந்துபோகிற அல்லது நிலையற்ற அற்பநாட்கள் வாழப்போகும் இந்தப் பூமியில் வாழும் மக்கள் தங்கள் குடியுரிமையை நிலைநாட்டப் போராடும் இந்த நிலையில், நிலை யான, அழியாத, மாசற்ற பரலோ கத்தில் (யோவா.3:16, 1 பேது.1:4) வசனங்களின்படி வாழ விரும்பும் தேவனுடைய மக்களாகிய நாம், நமது மெய்யான குடியுரிமையைக் குறித்த ஒரு தெளிவான விழிப் புணர்வும், விவேகமும் பெற்றுக் கொள்வது நமக்கு நன்மை யாக இருக்கும் என்று நாம் உணர வேண்டும்.

**பரலோகக் குடியுரிமை**

வேதத்தின்படி நாம் இந்த பூமிக் குரியவர்கள் அல்ல (அல்லது) இந்த பூமியின் குடிமக்கள் அல்ல என்றும்; நாம் பரலோகக் குடிமக்கள் (Heavenly Citizens) எனவும் வேதம் சொல் வது உங்களுக்குத் தெரியுமா? இதோ வேத வசனங்கள்! பிலி.3:20இல் நம்முடைய குடியிருப்போ பரலோகத் திலிருக்கிறது. • யோவா.15:19இல் நீங்கள் உலகத்தாராயிராதபடி யினால்... உலகம் உங்களைப் பகைக்கிறது. • எபி.13:14இல் நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித்

தேடுகிறோம். • யோவா.14:2இல் என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ் தலங்கள் உண்டு...ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். • ஆதிப்பிதாக்களான விசுவாச வீரர்களைப் பற்றி எபிரேய நிரூபத்தின் ஆக்கியோன் • (எபி.11:13-16)இல் இவ்வாறு சொல்கிறார்: “இவர்கள் எல்லாரும்...பூமியின் மேல் தங்களை அந்நியரும் பரதேசி களும் என்று அறிக்கையிட்டு, விசு வாசத்தோடே மரித்தார்கள். இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுய தேசத்தை நாடிப் போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். தாங்கள் விட்டு வந்த தேசத்தை நினைத்தார் களானால், அதற்குத் திரும்பிப் போவ தற்கு அவர்களுக்குச் சமயங் கிடைத் திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவ னென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே. • எபே.2:19 இல் நீங்கள் இனி அந்நியரும் பரதேசி களுமாயிராமல், பரிசுத்தவான் களோடே ஒரே நகரத்தாரும் தேவ னுடைய வீட்டாருமாயிருக்கிறீர்கள். • கொலோ.3:1இல் நீங்கள் கிறிஸ்து வுடன்கூட எழுந்த துண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரி சத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். • எபி.12:22-24இல் நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம்பதினாயிரமான தேவதூதர் களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர் களின் சர்வசங்கமாகிய சபை யினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத் திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான் களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ் தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசி னதைப் பார்க்கிலும் நன்மையான வைகளைப் பேசுகிற தெளிக்கப் படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்.

**பரலோகக் குடியுரிமையைப் பெற கீழ்க்கண்ட தகுதிகள் போதுமா?**

**1.பிறப்பு** - ஒரு கிறிஸ்தவ குடும் பத்தில் பிறந்திருத்தல் (By Birth in a Christian Family?)

**2.வம்சாவழி** - என்னுடைய முன்னோர்கள் கிறிஸ்தவர்கள் (Christian by Descent?)

**3.பதிவு செய்தல்** - நான் கிறிஸ்த வனாக என்னை மதம் மாற்றி பதிவு செய்து கொண்டேன் (Christian by Registrration?)

**4.இயல்பாக**-நான் கிறிஸ்த வர்கள் கூட்டத்தாரோடு சேர்ந்து எனது கலாச்சாரம் மற்றும் நடை, உடை, பாவனைகளை மாற்றிக் கொண்டேன், ஆலயமும் செல்கிறேன் - (Christian by Natualization?)

**5.ஒரு கிறிஸ்தவ நாட்டுடன் இணைதல்** - நான் இப்போது

கிறிஸ்தவ நாட்டின் குடியுரிமை பெற்று அந்த நாட்டுடன் இணைந்து வசித்து வருகிறேன் - (Christian by incorporation of Territory?) இவை எதுவும் தகுதியாகக் கருதப்படுவதில்லை என்றே வேதம் சொல்கிறது.

**பரலோகக் குடியுரிமை பெறுவதற்கு வேதம் சொல்லும் தகுதிகள் என்ன?**

நான் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுள்ளேன், ஞானஸ்நானம் மற்றும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற ஓர் ஆவிக்குரிய சபையோடு ஐக்கியம் வைத்துள்ளேன் என்று நாம் நினைக்கலாம். இவையெல்லாம் கிறிஸ்துவைப் பின்பற்றி அவருக்கு சீஷராக இருப்பவரின் அடிப்படைத்தகுதிகள். ஆனால் இந்த அடிப்படைத் தகுதிகள் இருக்கும் அனைவரும் பரலோக இராஜ்யத்தின் குடியுரிமை பெற இயலாது. பரலோகக் குடியுரிமையைப் பெற வேதம் சொல்லும் தகுதிகளை சில வசனங்களின் வழியாகப் பார்க்கலாம்.

1.மத்.5:3 ஆவியிலே எளிமையுள்ளவர்கள்

2.மத்.7:21 பரலோகத்திலிருக்கிற பரம பிதாவின் சித்தம் செய்பவர்கள்

3.மத்.7:13,14 இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கிறவர்கள்.

4.மத்.5:10 நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள்

5.மத்.16:24-25 தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு இயேசுவைப் பின்பற்றுபவர்கள்.

6.மத்.6:20 தங்கள் பொக்கிஷங்களை பரலோகத்தில் சேர்த்து வைப்பவர்கள்.

7.மத்.5:20 வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் அதிக நீதியுடையவர்கள்

8.லூக்.16:10 கொஞ்சத்திலே உண்மையுள்ளவர்கள்

9.கொலோ.3:1,2 பூமிக்குரியதைத் தேடாமல், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுபவர்கள்

10.வெளி.1:3 தேவனுடைய தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவர்கள், கேட்கிறவர்கள், அதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக் கொள்பவர்கள்

11.வெளி.2:4,5 தேவன் மீதுள்ள ஆதி அன்பை புதுப்பித்துக் கொள்பவர்கள்

12.வெளி.2:10 உபத்திரவம், பாடுகளில் தேவனை மறுதலிக்காமல் மரண பரியந்தம் உண்மையாயிருப்பவர்கள். குறிப்பிடப்பட்ட வசனங்களை வாசித்து தியானித்து தெளிவடைவது நல்லது. நிரந்தரமற்ற உலகில் நிரந்தரமான குடியுரிமைக்காக ஜனங்கள் போராடுகிற வேளையில், நிரந்தரமான பரலோகத்தில் வாழ்வதற்கான நிரந்தரமான குடியுரிமை குறித்து இதுவரை சிந்திக்காதிருந்தால், இந்தச் செய்தியை படித்த பின் பரலோகக் குடியுரிமை குறித்து நீங்கள் தீவிரமாக சிந்திக்க வேண்டுமென்பதே நம் எல்லோருடைய விருப்பமும் ஜெபமுமாக இருக்கட்டும்!

பாஸ்டர். சாம் இராமலிங்கம்
போன்: 94434 23660 ●



# தென் தமிழகத்தில் கால்டுவெல்

இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் வெளிநாட்டிலிருந்து வந்த கிறிஸ்தவ மிஷனெரிகளின் நற்பணிகள் என்றும் மறக்க முடியாதவைகள். அவர்களுடைய இறைப்பணி, கல்விப்பணி, மற்றும் மருத்துவப்பணி, தமிழ்த்தொண்டு இவைகளை உள்ளடக்கிய சமுதாயப் பணி இவைகளெல்லாம் தனித்தன்மை வாய்ந்தவைகள்.

இதைக் குறித்து ''தேவனுடைய வார்த்தை'' இதழில் எழுதியிருக்கிறோம். ''தென் தமிழகத்தில் கிறிஸ்தவ மிஷனெரிகள்'' என்ற தலைப்பில் புத்தகமும் வெளியிட்டிருக்கிறோம் என்பது வாசகர்கள் அறிந்ததே. இவை எல்லாவற்றிற்கும் மேலாக தென் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் கால்டுவெல் அகழ்வாராய்ச்சி செய்ததின் விளைவாகக் கிடைத்த கண்டுபிடிப்புகள் குறிப்பிடத்தக்கவை. 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழ்ச் சமுதாயம் சிறப்பான நாகரிகம் உடையதாயிருந்திருக்கிறது என்பது மாத்திரமல்ல சீனா, அரபு, கிரேக்க நாடுகளோடு வாணிபத் தொடர்புள்ளதாயிருந்துள்ளது. இன்று அச்சமுதாயம் இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை சுமந்துகொண்டு கடல் கடந்து அருட்பணியாற்றி வருவதைக் காணும்போது மனநிறைவடைகிறோம். அகழ் ஆய்வு கண்டுபிடிப்புகளை வாசகர்கள் கவனத்திற்கு வைப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

### அகழாய்வு

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் கால்டுவெல் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டார். தென்கடற்கரையில் தூர்ந்து கிடந்த சிற்றூர்களையும் ஆங்காங்கு கிடைத்த பழங்காசுகளையும் ஆராய்ந்து தமிழ்நாட்டின் சிறப்பினையும் பழம் பெருமையினையும் எடுத்தியம்பினார். அகழ் ஆய்வுகளின் மூலமாக பல பண்டைய கட்டங்களின் அடிப்படைகளையும் நாணயங்கள், முதுமக்கள் தாழிகள் போன்றவற்றையும் கண்டுபிடித்து உலகிற்கு அறிமுகப்படுத்தினார். மேலும் பாண்டிய நாட்டின் மீன் சின்னம் பொறித்த தங்கக்காசுகளையும் கண்டறிந்தார்.

இலங்கையிலுள்ள மகா வம்ச நூலை ஆதாரமாகக் கொண்டு தமிழகத்திற்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பை விவரித்துள்ளதுடன், விஜயன் என்னும் சிங்கள மன்னன் பாண்டிய அரசனின் மகளைத் திருமணம் புரிந்து, பாண்டிய அரசனுக்கு ஆண்டுக்கு இருநூறாயிரம் ரூபாய் மதிப்புள்ள முத்தும் சங்கும் கொடுத்தான் என்ற செய்தியினையும் சுட்டிக்காட்டியுள்ளார். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பழந்தமிழர்கள் கடல் கடந்து பிறநாடுகளில் குடியேறி

செய்த வாணிபத்தைப் பற்றி கால்டு வெல் விவரித்துள்ளார். பழைய ஈபுரூ மொழியில் வழங்கும் துகி என்னும் சொல், தமிழ் மொழியிலுள்ள தோகை என்னும் சொல்லின் சிதை வென்றும், மேலை நாட்டுச் செம் மொழிகளுள் சிறந்த கிரேக்க மொழியில்“அருசா” என்று வழங்கும் சொல், தமிழ் மொழியிலுள்ள அரிசி என்னும் சொல்லின் சிதைவென்றும் கால்டுவெல் நிரூபித்துள்ளார்.

**முதுமக்கள் தாழிகள்**

கால்டுவெல் பல முதுமக்கள் தாழி களைக் கண்டுபிடித்தார். அனைத்தும் மிகப்பெரிய அளவில் மண்ணால் செய்யப்பட்டவையாகும். அவற்றுள் மனித எலும்புகள் சிதைந்து போன நிலையில் காணப்பட்டன. கால்டு வெல் 11 அடி சுற்றெல்லையை உடைய பெரிய தாழிகளையும் 4 அல்லது 5 அடி சுற்றெல்லையை உடைய சிறிய தாழிகளையும் கண்டு பிடித்தார். ஒவ்வொரு தாழியும் வெவ் வேறு அமைப்புடன் காணப்பட்டன. இத்தாழிகளில் கைப்பிடி, மூடி, கால் போன்ற எந்த பகுதிகளும் இல்லை. இவை நடுப்பாகத்தில் அகன்றும் தலைப்பகுதியில் குவிந்தும் காணப் பட்டன. ஒரு மனித உடலை வைக்கும் அளவிற்குப் பெரிதாகக் காணப் படினும் வாய்ப்பாகம் உடலை நுழைக்க முடியாத அளவிற்குக் குறுகியதாக உள்ளது. பெரிய எலும்புகள் மட்டுமே தாழியில் காணப்பட்டன. அவர் பல தாழி களுடன் மனித எலும்புகளையும் சிறிய மண்பாண்டங்களையும் கண்டெடுத்தார். திறந்த ஒரு தாழியில் சிறிய செம்பு வளையலும் கிடைத்தது. சில இடங்களில் தாழிகளின் வெளிப் புறங்களில் சிறிய மட்பாண்டங்கள் அடுக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான மட்பாண்டங்கள் கறுப்பு நிறத்தில் இருந்தன. ஒரு தகட்டுப்பாளத்துடன் ஐந்து சிறிய மட்பாண்டங்கள் கிடைத்த போது அவற்றைக் கால்டு வெல் அங்குள்ள மக்களிடம் காண் பித்து விளக்கம் கேட்டார். அதற்கு அப்பகுதி மக்கள் அவற்றை எண்ணெய்க் கலயத்துடன் ஒப்பிட்டுக் கூறினர். இப்பகுதியில் கிடைத்த மட்பாண்டங்களையும் இரும்புக் கருவிகளையும் ஆயுதங்களையும் பார்க்கும் போது, இங்கு வாழ்ந்த மக்கள் நாகரீகமிக்கவர்களாக வாழ்ந் திருப்பர் என்னும் முடிவுக்குக் கால்டு வெல் வந்தார். இவர்கள் பிராமணீய இந்துக்கள் அல்லர் என்பது கால்டு வெல்லின் கருத்தாகும். ஏனென்றால் ஆரியர்கள் அறியப்படாததற்கு முன்னரே இம்மக்கள் இங்கு வாழ்ந் துள்ளனர் எனக் கால்டுவெல் குறிப் பிடுகிறார். இத்தாழிகள் கிறிஸ்து வுக்கும் முற்காலத்திலுள்ளவை எனக் கருத முடிகின்றது. திருநெல்வேலி, மதுரை, திருவிதாங்கூரிலுள்ள வடக்கு, தெற்குப் பகுதிகளில் கண் டெடுக்கப்பட்ட இத்தாழிகள் வரலாற் றின் பல புதிய ஆய்வுகளுக்கு ஆதாரமாக அமைந்துள்ளன.

**கொற்கையில் புதைபொருள் ஆய்வு**

கால்டுவெல் கொற்கையிலும்

அதைச் சுற்றியிருந்த ஊர்களிலும் புதைபொருள் ஆய்வினை மேற் கொண்டார். முற்காலத்திலுள்ள கொற்கைத் துறைமுகம் பிற் காலத்தில் அதிலிருந்து கடல் விலகிச் சென்ற காரணத்தால் அத்துறை முகம் பழம் பெருமையை இழந்த தென்று எண்ணினார். அக்கசாலை என்னும் பகுதி நாணயம் செய்யும் இடமாக அக்காலத்தில் திகழ்ந்தது என்பதனையும் கண்டுபிடித்தார்.

கொற்கையில் செய்த அகழ் ஆய்வின் மூலம் ஆறடி மண்ணின் கீழ் மணற்பாறையும், அப்பாறை யின் அடியில் ஓரடி ஆழத்தில் கடற் கரைக் குறுமணலும் அமைந் திருக்கக் கண்டார். மேற்பரப்பிலுள்ள மணலின் கீழ் சங்குகளும் சிப்பி களும் காணப்பட்டன. ஆறடி மண்ணின் கீழ் அமைந்த மணற் பாறையின் பரப்பே முற்காலத்தில் கடற்கரையாக இருந்திருக்க வேண்டும் என்றும், ஆற்றுநீரில் கலந்து வந்த மண்ணும் மணலும் துறைமுகத்தில் படிந்து நாளடைவில் கடலைத் தூர்த்தன என்றும் அவ்வாறு படிந்த மண்ணால் அழுத் தப்பட்ட அடிமணல் இறுகி ஓரடிப் பாறையாக உறைந்ததென்றும் கால்டுவெல் முடிவுக்கு வந்தார்.

கால்டுவெல் கொற்கையில் புதை பொருள் ஆய்வு செய்தபோது கோவி லின் சுவரைக் கண்டார். கால்டு வெல்லின் உதவியாளரின் மேற் பார்வையில் அவ்விடத்தில் நான்கு நாட்களாக 12 வேலையாட்கள் மூலம் தோண்டும் பணி நடை பெற்றது. அந்த மாவட்டத்திலுள்ள ஆட்சித்தலைவர் இப்பணிக்கு ஆதரவும் பாதுகாப்பும் அளித்தார்.

கொற்கை, தாமிரபரணிக்கரை யிலுள்ள மிகப் பள்ளமான கடற் கரைப்பகுதியாகும். ஆற்று வண்ட லால் மேல் பகுதியில் களிமண் படிந் துள்ளது. உழவுத் தொழிலுக்குப் பயன்படாத இந்த நிலத்தில் ஆழ் கடல் சங்குகளும் படிந்துள்ளன. இந்நில அடுக்கின் ஆழம் சராசரியாக ஆறு அடிக்கு மேல் இல்லை. இப்பகுதியில் உப்புக்கற்களும் உடை படாத சிப்பிகளும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. பழைய கடற்கரைப் பகுதியில் பல வினோதமான சிப்பிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்குக் கிடைத்த சில சிப்பிகள் மிக அண்மைக் காலத்தில் உயிர் வாழ்ந்தது போன்று தோற்றமளிக்கின்றன. இங்கு மக்கள் ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்திருக்க வேண்டும் எனக் கால்டுவெல் குறிப்பிடுகிறார். மேலும் இப்பகுதியில் கிரேக்க அடை யாளங்கள் ஏதேனும் கிடைக்கும் என்றும் எதிர்பார்த்தார். ஆனால், அவருக்கு ஏமாற்றமே கிடைத்தது. அப்போதைய நிலத்தின் மட்டம் தற் போது உள்ளதைவிட எட்டு அடிக்குக் கீழே இருந்தது. கால்டுவெல் அந்நிலத்தைத் தோண்டும் போது கிடைத்த மனிதர்களின் குடியிருப்பு களும் மண்பாண்டங்களும் தமிழர் களுடையதாக இல்லை. இரண்டு சிங்கள செப்புக் காசுகளும் அமர்ந்த

நிலையிலுள்ள புத்தர் சிலைகள் ஒன்று ஊரிலும் மற்றொன்று வயல் வெளியிலும் கிடைத்தன. மேலும் இப்பகுதியில் மூன்று முதுமக்கள் தாழிகளைக் கண்டெடுத்தார். இத்தாழிகள் சாதாரணப் பாண்டங் களைக் காட்டிலும் சிறப்பான முறையில் செய்யப்பட்டிருந்தன. இதனுள் கிடைத்த பிற பாத்திரங்கள் அழகாக உருவாக்கப்பட்டுள்ளன. கால்டுவெல் கண்டெடுத்த தாழி களுள் இரண்டில் எலும்புகள் இல்லை. ஆனால் எலும்புத்துகள் களும் மண்டையோடுகளும் காணப்பட்டன. மண்டையோடு களில் உப்புக்கற்கள் நிறைத்து வைக்கப்பட்டிருந்தன. இது இங்கு வாழ்ந்த மக்களின் பழக்கத்தைக் காட்டுகின்றது. இப்பகுதியில் முன்னர் வாழ்ந்த இனம் அழிந் திருக்க வேண்டும் என ஐரோப்பி யர்கள் நம்புகின்றனர் எனக் கால்டு வெல் குறிப்பிடுகிறார்.

**காயல்**

கொற்கையை அடுத்த துறைமுக மாக பழைய காயல் விளங்கியதை கால்டுவெல் நிரூபித்தார். கொற் கைக்கும் கடலுக்கும் இடையில் பழைய காயல் உள்ளது. பழங்காய லுக்கு புன்னைக்காயல் என்னும் பெயரும் உண்டு. இதனை மார்க் கோ போலோ ஒரு முக்கிய நகரம் என்றும் கிழக்குக் கடலின் துறை முகம் என்றும் குறிப்பிடுகிறார். கடலிலிருந்து கொற்கையும் காயலும் முறையே ஐந்து மற்றும் இரண்டு மைல்கள் தூரத்தில் உள்ளன. இங்கிருந்து சீனா, அரேபியா போன்ற நாடுகளுடன் வாணிபம் நடந்தமையை இங்குக் காணக் கிடைக்கும் மண்பாண்டங்கள் மூலம் அறியமுடிகின்றது. காலமாற்றத் தால் காயல் கடலை விட்டு விலகி விட்டது. கால்டுவெல் பழைய காயலை இருமுறை பார்வையிட்டார். ஒரு நாள் ஒன்பது இடங்களில் தோண்டிப் பார்த்தார். மூன்று அடிக்குக் கீழே ஒரு வீட்டின் தளம் தென்பட்டது. கால்டு வெல்லுக்குக் காயலில் கிரேக்கச் சுவடுகள் பல கிடைத்தன. அவர் உடைபட்ட சீன, அரேபிய பாண்டங் களைச் சேகரித்தார். அங்குள்ள மக்கள் புதைத்துள்ள பெருஞ்செல்வங் களைக் கெட்ட ஆவிகள் காத்து வருவ தாகவும் அவற்றை வெளியே எடுத் தால் அவை கோபம் கொண்டு ஊரையே அழித்து விடும் எனவும் தெரிவித்தனர். காயல், காயல் பட்டினம், குலசேகரப்பட்டினம் போன்ற இடங்களில் அரேபியர்கள் தங்கியிருந்து வாணிபம் செய்தனர். இங்கு கண்டெடுக்கப்பட்ட புதை யல்கள், திருடர்களுக்கும் கலகங் களுக்கும் பயந்து மக்கள் புதைத்து விட்டு, பின்னர் எடுக்காமல் விட்டன வாகும். ●

**நன்றி: "அருட்பணியாளர் இராபர்ட் கால்டுவெல்"**

**- முனைவர் யோ.ஞான சந்திர ஜான்சன்**

**மோரியா ஊழியங்கள் வெளியீடு.**

# திருநெல்வேலி அய்யங்கார் மகள் நாச்சியார்

(தனது பாட்டியின் வாழ்க்கை சரிதையை தாய் சொல்ல கேட்டு
எழுதியவர் திருமதி.ஆக்னஸ் டேவிட்சன்)

திருநெல்வேலியிலுள்ள அக்ர காரத்தில் வாழ்ந்து வந்த தம்பதி யினர் ரெங்கசாமி அய்யங்காருக்கும் செல்வமாளுக்கும் பிறந்த நாச்சியார் எல்லாரையும் மயக்கும் வண்ண மாக மிகுந்த அழகுடையவராக இருந்தாள். நான்கு வயதே நிரம்பிய இவளுக்கு 10 வயது சிறுவனை திருமணம் செய்து வைத்தனர். (அப்பொழுது மங்கையின் திருமண வயது 21 என்ற சட்டம் இல்லை) நாச்சியாரின் கணவன் திருவனந்த புரத்தில் படிக்க சென்றபொழுது விபத்தில் இறந்து விட்டான். தனது 10ஆவது வயதில் சிறுமி நாச்சியார் கைம்பெண் ஆனாள். இவளது உற்றார் உறவினர் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் இவளைப் பார்க்கும் போதெல்லாம் பீடை, தரித்திரம், மகாபாவி என்று சொல்வதைக் கேட்டுக் கேட்டு சலித்துப் போனாள். நான் மகாபாவி என்றால் அதற்குப் பரிகாரம் என்ன என்று சிந்திக்க லானாள்.

இவளது தந்தை இவளை அருகில் உள்ள ஒரு கிறிஸ்தவப் பள்ளியில் சேர்த்தார். அந்த பள்ளியை நடத்தின வெளிநாட்டு மிஷனெரிகள் இவளை மிகவும் அன்போடு வழிநடத்தினர். இவர் களது ஆறுதலான வார்த்தைகளால் நாச்சியார் உள்ளத்தில் புத்துணர்ச்சி அடைந்தாள். பள்ளியில் இயேசு கிறிஸ்துவைக் குறித்து நன்றாக அறிந்து கொண்டாள். தனது சொந்த மக்களால் மகாபாவி என்ற பட்டம் பெற்ற இவள் இயேசுவே ரட்சகர் என்பதை அறிந்து கொண்டதால் இவளது புண்பட்ட நெஞ்சம் ஆற ஆரம்பித்தது. பள்ளியில் கற்றுக் கொண்ட வேத சத்தியங்களை வீட்டில் எல்லாரிடமும் பகிர்ந்து கொள்வாள். இவளது குரல் இனிமையாக இருக்கும். “தேன் இனிமையிலும் இயேசுவின் நாமம்” என்ற கீர்த் தனைப் பாடலை இவள் பாடும்போது எல்லாரும் மெய்சிலிர்த்து விடு வார்கள்.

இவளை மிஷனெரிப் பள்ளியில் சேர்த்ததால் இவள் நம்ம குலத்து ஆச்சாரத்தை விட்டு கிறிஸ்தவப் போதனையாலே வஞ்சிக்கப்பட்டு விட்டாளே என்று இவள் பெற்றோர் பயந்தனர். இவளை இப்படியே விட்டு விடக் கூடாதென்று இவளை ஒரு விதவையின் ஆசிரமத்தில் சேர்த் தனர். கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத் திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாச மோசமோ, பட்டயமோ? இவை எல்லாவற்றிலேயும் நாம் நம்மில்

அன்புகூருகிறவராலே முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கி றோமே! என்ற ரோம.8:36,37 உண்மையை இவளது பெற்றோர் அறியவில்லை. அங்கே இவளுக்கு தகுந்த பாதுகாப்பு இல்லாததால் தன் தந்தையிடமே வந்து விட்டாள். வேறுவழியில்லாமல் இவளை இவள் தாய்மாமன் வீட்டிற்கு அனுப்பத் திட்டமிட்டு, சென்னை செல்லும் இரயிலில் இவள் பெண்கள் பெட்டியிலும், இவள் தந்தை, அடுத்த இரயில் பெட்டி யிலும் பயணம் செய்தனர். இவள் தன் அருகில் இருந்த பெண்ணிடம் தன் கதையைச் சொல்லவும், அவள் தந்திரமாய் இவளுக்கு உதவி செய் வது போல் நடித்து, நாகபட்டினத்தில் தன் வீட்டிற்கே கூட்டிக்கொண்டு சேர்த்து விட்டாள். இவள் ஒரு வேசி என்று கண்டவுடன் அங்கிருந்தும் தப்பி அங்குள்ள மிஷனெரி குரு வானவர் கனம். பின்டிலேயிடம் தஞ்சம் புகுந்தாள்.

ரெங்கசாமி அய்யங்கார் நாச்சி யார் காணாமல் போய் விட்டாள். இவளைக் குறித்து தகவல் கொடுப்ப வர்க்கு தகுந்த சன்மானம் அளிப்ப தாக செய்தித்தாளில் விளம்பரம் கொடுத்திருந்தார். இதை வாசித்த குருவானவர் நாச்சியாரைப் பற்றிய தகவலை தந்தைக்குத் தெரிவித்தார். ஆகவே நாச்சியார் பற்றிக்கொண்ட தெய்வம் அவளைக் கைவிட வில்லை என்பதை அவளது தந்தை அறிந்து கொண்டார். நாச்சியார் குருவானவரின் பராமரிப்பில் இருந்த தால் இயேசு கிறிஸ்துவைக் குறித்து மேலும் நன்றாக அறிந்து கொண்டாள். அவர் இவளுக்கு திருமுழுக்கு கொடுக் கவும் ஒப்புக்கொண்டார். செய்தி அறிந்த நாச்சியாரின் தந்தை திரு முழுக்கு ஆராதனை முடிந்து வெளியே வரும் பொழுது அவளைக் கொன்று விட வேண்டும் என்ற தீர்மானத்துடன் ஆலயத்திற்கு வெளியே ஆயத்தமாக இருந்தார். இவளுக்கு லூயிசா நாச்சி யார் என்று திருமுழுக்கு கொடுக்கப் பட்டது.

ஆலயத்திற்கு வெளியே பெரிய கூட்டத்தைப் பார்த்த குருவானவர் இவளைக் காப்பாற்றும்படி ஆலயத் தின் பின்புறமாக இருவரும் வெளி யேறி, சென்னை செல்லும் இரயிலில் ஏறிவிட்டனர். நாச்சியாரை காண முடியாமல் ஏமாந்து போன கூட்டம் இவர்கள் சென்னைக்குச் செல் கிறார்கள் என்பதை அறிந்து ஆங்கி லேயர்கள் எங்கள் மகளை கடத்தி செல்கின்றார்கள் என்று காவல் நிலை யத்தில் புகார் செய்ததால் இரயிலை நிறுத்திச் சோதிக்க வழி செய்தனர். இரயில் நிறுத்தப்பட்டு, நாச்சியார் வன்முறை கும்பலிலிருந்து பாது காக்கப்பட பத்திரமாய் காவல் நிலையத்தில் ஓர் அறையில் அடைக்கப்பட்டாள். நாச்சியார் ஊக்க மாக தன் பரம தந்தையிடம் மன்றா டினாள். மறுநாள் காலை நீதி மன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டது. நாச்சியாருக்கு உதவியாக குரு

வானவர் அநேக கிறிஸ்தவர் களைக் கூட்டிக் கொண்டு வந்திருந்தார். நீதிபதி நாச்சியாரை பேசும்படி கட்டளையிட்டதும் நாச்சியார் தைரிய மாக பதிலுரைத்தாள்.

"நீதிபதி அவர்களே, எனக்கு வயது 16-ரைத் தாண்டிவிட்டது. என் சொந்த ஜனங்கள் என்னை மகா பாவி என்று வெறுத்துத் தள்ளினர். பாவிகளின் நேசர் இயேசு பெருமான் என்பதை நான் வேதபுத்தகத்தின் மூலம் அறிந்து கொண்டேன். அவரையே என் ஆத்தும நாயகனாக நான் தெரிந்துகொண்டேன். சட்டத் தின்படி எனக்கு சுயமாகத் தீர்மானம் எடுக்க உரிமையுண்டு" என்றாள்.

நீதிபதி அவர்களும் உடனே பின்வருமாறு தீர்ப்பு கூறினார். "நாச்சியார் 16 வயது நிரம்பி அறிவில் பக்குவப்பட்டவளாக இருக்கிறாள். ஆகவே அவளுக்குச் சுயமாய்த் தீர் மானம் எடுக்க உரிமை உண்டு. அவளைப் பாதுகாப்பாக சென்னை கொண்டு சேர்க்க வேண்டும்" என்றார். "ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப்படுத்துவாய்" என்ற சங்.50:15 வாக்கின்படி நாச்சியார் பத்திரமாய்ச் சென்னை கொண்டு சேர்க்கப்பட்டாள். அங்கே கூலிங் தம்பதியினர் இவளைப் பொறுப் பேற்றுக் கொண்டனர். அங்கே அவள் தனது பள்ளிக் கல்வியை முடித்தாள்.

ஒருநாள் அவளுக்குத் தனது தந்தையிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் "உன் கணவன் மரிக்கவில்லை. அவன் தன் படிப்பை முடித்து திரும்பி வந்து விட்டான். உன்னை நாங்கள் சேர்த்துக் கொள்ள ஆயத்தமாயிருக் கிறோம். இப்படிக்கு உன் பிரிவால் வாடும் தந்தை" என்று எழுதி இருந்தது. கடிதத்தைப் படித்து கண் கலங்கினாள். ஒருபுறம் தன் குடும்பப் பற்று மறுபுறம் இயேசுநாதர் மீதுள்ள அவளது அன்பும் நம்பிக்கையும். இது சாத்தான் தன் வழிக்கு இழுக்கும் வலை என்று உணர்ந்து கொண்டாள். மிகவும் குழம்பிய வளாக அன்று மாலை ஆராத னையில் கலந்து கொண்டாள். ஆலயத்தில் ஜெபித்துக் கொண்டே இருந்தாள். "என் ஆத்தும நாய கனே, என் உள்ளத்தை ஆட் கொண்டவரே, பெற்றோரின் பாசம் என்னை இழுக்கிறது. ஆண்டவரே நீரே என்னை வழிநடத்தும். உமது திருச்சித்தமே நிறைவேற உதவி செய்யும்" என்று மன்றாடினாள்.

அன்று செய்தி கொடுத்த அந்த சபைப்போதகர் ரெங்காசாமி ஆவார். இவரும் பிராமண குடும்பத்தி லிருந்து இயேசுவை ஏற்றுக் கொண்ட வர். அன்று பிரசங்கவாக்கியம் **"நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப் பீர்கள். கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள், பாகால் தெய்வமானால் அவரைப் பின்**

**பற்றுங்கள்''** (1 இராஜா.18:21). போதகரின் வார்த்தைகள் ஈட்டி போல் அவள் உள்ளத்தைக் குத்தின. அங்கேயே தீர்மானம் எடுத்தாள். ''நீரே என் இரட்சகர், நீரே என் நேசர். மரணமானாலும், ஜீவனானாலும் நான் உம்மை விடேன். நீரே என் தெய்வம். இறுதிவரை என்னைக் காத்தருளும்'' என்று ஜெபித்து முடித்ததும் தனக்கு ஒரு புது பெலன் கிடைத்ததை உணர்ந்தாள்.

கூலிங் தம்பதியினர் இவளுக்கு நல்ல ஒரு வரன் தேட ஆரம்பித்தனர். அங்குள்ள சபையில் குருவாக இருந்த கனம் வேதக்கண் ஐசக் அவர்தான் இவளுக்கு ஏற்ற துணை என்பதை அறிந்து திருமணம் செய்து வைத்தனர். புதுமணத் தம்பதியினர் சிறப்பாகக் கர்த்தருக்கு ஊழியம் செய்து வந்தனர். நாச்சியார் குறிப்பாக பிராமணப் பெண்கள் மத்தியில் நல்ல ஊழியம் செய்தார். நாச்சியார் கணவனுடன் சேர்ந்து கிராமங்களில் கதா காலச்சேபம் செய்து கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்பினார். இவர் பிடில் வாசிப்பதிலும் சிறந்தவர். இவர்களுக்கு 3 பெண் குழந்தைகளும் 2 ஆண் குழந்தைகளும் பிறந்தனர்.

ஒருநாள் ஆசிரியர்களின் சம்பளத் தொகையுடன் இரவில் மாட்டு வண்டியில் பயணம் செய்ய நேர்ந்தது. திடீரென்று ஒரு திருடர்கள் கூட்டம் அவர்களை வழி மறித்தது. ஒரு திருடன் வண்டியில் நாச்சியார் அம்மாளை பார்த்து விட்டான். ''அம்மா, நீங்கள் தானே நான் காலராவில் சாகக் கிடக்கும்போது மருந்து கொடுத்தீர்கள். உயிர்கொடுத்த தெய்வம் நீங்கதான் அம்மா'' என்று சொல்லி அவர்களை பாதுகாப்பாக கொண்டு வந்து ஊர் சேர்த்தான்.

திருச்சி அருகே தென்னூர் என்னும் கிராமத்தில் பிராமணப் பெண்கள் மத்தியில் நாச்சியார் தொடர் ஊழியம் செய்து வந்தார். அப்பொழுது கிருஷ்ணசாமி என்ற வாலிபரைச் சந்திக்க நேர்ந்தது. அவன் கிறிஸ்து மார்க்கத்தில் கொஞ்சம் ஆர்வம் காட்டி வந்தான். அவனிடம் புதிய ஏற்பாடு இருந்ததால் அதை ஒழுங்காக வாசித்து வந்தான். நாச்சியார் அவனைக் கிறிஸ்துவண்டை வழி நடத்தினார். அவனையே இவர்களின் மூத்த மருமகனாக கிடைக்கப் பெற்றது பெரும் பாக்கியம் ஆயிற்று. இவர்களுக்கு பிறந்த மகளே திருமதி. ஆக்னஸ் டேவிட்சன். இவர் ஒரு சிறந்த பாடகர். அநேக இசைத் தட்டில் இவர் பாடலை நாம் கேட்கலாம். அதில் மிக சிறந்த பாடல் ''உந்தன் சித்தம் போல் நடத்தும்''என்பது.

நாச்சியாரை வழிநடத்திய தேவன் உங்களையும் வழிநடத்துவார். ''நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்வேன்'' (சங்.32:8). ●

**நன்றி: ''உள்ளத்தை உருக்கும் உண்மைச் சம்பவம்''**
**தொகுப்பு. திரு.ம.ஜெயச்சந்திரன்.**

# நாம் ஆண்டவருக்கு வேண்டும்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மனுக்குலத்தை பாவத்திலிருந்து மீட்டெடுக்க தம்மைத் தாமே தியாக பலியாகச் சிலுவையில் கொடிய மரணத்தைச் சந்தித்தார். ஆகவே அவருடைய பாடுகளையும் தியாகமரணத்தையும் அன்றாடம் தியானிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எனினும் குறிப்பாக இந்த லெந்துகால கிறிஸ்தவர்களாகிய நாம் குருத்தோலை ஞாயிறன்று துவங்கி, இயேசு உயிர்த்தெழுந்த நாள் (ஈஸ்டர்) வரை ''பரிசுத்த வாரம்'' என அனுசரிக்கிறோம். லெந்து காலம் (Lent days) என்பது லெண்ட் (Lent) என்ற ஆங்கிலச் சொல்லை அப்படியே ''லெந்து'' என்று தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. லெண்ட் (Lent) என்ற சொல்லுக்கு சொல்லகராதி (Period of penitence) பொருள் கூறுகிறது. ஆகவே இவ்விரண்டு காரியத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். அப்படியானால் **தன்னுடைய தவறுகளையும் பாவங்களையும் உள்ளுறுத்தலோடு ஆழ்ந்து சிந்தித்து அறிந்து அவற்றை விட்டுவிடும் காலம் என்று பொருள் கூறுகிறது.** வேறுவிதமாகச் சொன்னால் நாம் பரிசுத்தப்படவேண்டிய காலம், நாம் இப்படிச் செய்கிறோமா என்பதை முன் நிறுத்தி சுய ஆய்வு செய்து பார்க்க வேண்டியது அவசியம். ''உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும்'' என்று (சங்.143:10)ஐ கேட்டுப் பெற்று சீர்படுத்திக் கொள்வோம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்ரவேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி கானானை நோக்கிப் பயணத்தைத் துவங்கினார்கள். அன்று இரவு பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் அவர்கள் சங்கார தூதனின் அழிவுக்குத் தப்பி மீட்கப்பட்டு விடுதலைப் பயணத்தைத் துவங்கியபடியால் அதை நினைவுகூரும் வகையில் அது பிரதானமான பண்டிகையாக இன்றுவரை ஆசரிக்கப்படுகிறது. எனவே பஸ்கா பண்டிகையை ஆசரிக்க உலகின் பலபாகங்களிலிருந்தும் திரள்கூட்ட யூதமக்கள் எருசலேமுக்கு வருவார்களாம். இவ்வாறு இயேசு பவனி சென்ற குருத்தோலை ஞாயிறன்று வந்த மக்கள் இரண்டரைக் கோடி என்றும், பலியிடப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டிகளின் எண்ணிக்கை இரண்டரை இலட்சம் என்றும் வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள் என்று வில்லியம் பார்க்லே தமது விளக்க உரையில் எழுதியுள்ளார் (The Study Bible Mattew Vol.2 page.238).

இத்திரள் கூட்ட மக்கள் மத்தியில் தான் இயேசு இராஜாதி இராஜாவாக கழுதைக்குட்டியாகிய மறியின் மேல் ஏறி, தம்மைத்தாமே பஸ்கா ஆட்டுக்குட்டியாக ஒரே தரம் பலியிடப்படவும், வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாகவும், எருசலேம் நோக்கி வெற்றி பவனி சென்றார். ''இதோ உன் ராஜா

உன்னிடத்தில் வருகிறார். அவர் நீதியுள்ளவரும், இரட்சிக்கிறவரும், கழுதையின் மேலும், கழுதைக்குட்டியாகிய மறியின் மேலும் ஏறிவருகிற வராயிருக்கிறார்" என்று சகரியா தீர்க்கன் முன்னுரைத்தது நிறைவேறிற்று (சக.9:9).

அந்நாட்களில் தீவிரவாத யூதர்கள் (செலோத்தியர்) இயேசுவாகிய மேசியா ரோம சாம்ராஜ்யத்தை வீழ்த்தி, தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்ற தவறான எண்ணம் கொண்டிருந்தார்கள். ஆனால் இயேசுவோ, என் ராஜ்ஜியம் இவ்வுலகத்திற்கு உரியதல்ல என்று கூறினார். மேலும் யூதர்கள், இயேசு தம்மை தேவகுமாரன் என்று கூறியதால் அவரை மதத்துரோகி என்று கூறிக் கொலை செய்ய எத்தனித்தனர். பெருங்கூட்ட மக்கள் இயேசுவுக்குப் பின் சென்றதால் ரோமர்கள் இயேசு தங்கள் ஆட்சியைக் கலைத்து, இஸ்ரவேல் இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க வந்த ஒரு புரட்சியாளர் என்றும் தேசத்துரோகி (Traitor) என்றும் கருதி அவரை சிலுவையில் அறைய சமயம் பார்த் திருந்தனர்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்தான் இயேசு தன்னைக் கொலை செய்யக் காத்திருக்கும் யூத சமயத் தலைவர்கள், ரோம அதிகாரிகள் வாழும் எருசலேமை நோக்கி இராஜாவாகப் பவனி சென்றார். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலின் ராஜாவாக முடிசூட்டப்படுபவர்களை கழுதையின்மேல் ஏற்றி ஊர்வலம் வந்து அரியணையில் அமர்த்துவார்கள். தாவீது அரசன் தன் முதிர்வயதில் தன் மகன் சாலமோனை அரியணையில் அமர்த்துவதற்கு கோவேறு கழுதையின் மேல் ஏற்றி ஊர்வலம் வரச் செய்ததை 1 இரா.1:33-39இல் வாசிக்கிறோம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க குருத்தோலை ஞாயிறன்று இயேசுவைச் சுமந்து சென்ற கழுதையைப் பற்றிச் சிந்திப்பது நமது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவும்.

### 1. இருவழிச் சந்தியில் கட்டப்பட்டிருந்த கழுதை: (மாற்.11:4)

இக்கழுதை போன்று நாமும் எந்த தெய்வம் நமக்குப் பாவ நிவாரணம் கொடுக்கும் என்று அறியாது எந்த வழியில் செல்வது என்று திகைத்து நிற்கிறோம். தான தர்மங்கள் செய்தல், புண்ணிய ஸ்தலங்களுக்குப் புனித யாத்திரை செல்லுதல், கங்கை போன்ற புனிதநதிகளில் புனித நீராடுதல், தவம் இருத்தல், விரதம் மேற்கொள்ளுதல் என்று நம்மை நாமே வருத்திக் கொண்டிருந்தோம். பல சடங்காச்சாரக் கட்டுகள் நம்மைக் கட்டி வைத்திருந்த நிலையில் நம்முடைய கட்டுகளை அவிழ்க்க ஓர் அதிசய அழைப்பு வந்தது.

இருவழிச் சந்தியில் கட்டப்பட்டுள்ள கழுதையை அவிழ்த்துக் கொண்டு வாருங்கள் என்று இயேசு சீடரிடம் கூறினார். கட்டவிழ்த்து அப்படியே விட்டுவிடவில்லை. நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' (யோவா.14:6) என்று போதித்து சரியான வழியைக் காட்டி நடத்தினார்.

### 2. முன்குறிக்கப்பட்ட கழுதை:

இக்கழுதை இயேசுவால் முன்குறிக்கப்பட்டிருந்ததால், கழுதையின் எஜமானனிடம் ''இது ஆண்டவருக்கு வேண்டும்'' என்று சீடர்கள் சொன்ன வுடன் அது கட்டவிழ்க்கப்பட்டு சீடர்கள் மூலமாய் இயேசுவிடம் அழைத்து வரப்பட்டது. இவ்வாறு பாவத்தில் கட்டப்பட்டிருந்த நம்மை இயேசு உலகத் தோற்றத்திற்கு முன்னரே முன்குறித்திருந்தபடியால் அவருடைய ஜீவனுள்ள வார்த்தை நம்மைச் சந்தித்தது. அவருடைய பிள்ளைகளாக மாறும் சிலாக்கியத்தைப் பெற்றோம். பாவத்திலிருந்து நம்மைத் தமது இரத்தத்தால் மீட்டெடுத்தார். ''அவருடைய (பிதா) தயவுள்ள கிருபையின் ஐசுவரியத் தின்படியே இவருடைய (இயேசு) இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது'' (எபே.1:3).

### 3. ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத கழுதை:

அக்கழுதையின் மீது இதுவரை யாரும் ஏறினது கிடையாது. கழுதையை பழக்குவிக்காவிட்டால் கழுதையின் மீது ஏறுவது கடினம், சங்.32:9இல் வாரினாலும்...வாய்க்கட்டப்பட்டாலொழிய உன் கிட்டிச்சேராத கோவேறு கழுதை...'' என்று வாசிக்கிறோம். ஆனால் இயேசுவண்டை அக்கழுதை வந்த பொழுது எந்தவிதச் சண்டித்தனமும் செய்யாது அவரைச் சுமந்து கொண்டு எருசலேம் நோக்கிப் பயணம் செய்தது. நம் பழைய மனுஷனைத் திரும்பிப் பார்க்கும்பொழுது, இயேசு நம்மை ஆட்கொண்டு நடத்த எப்பொழுது ஒப்புகொடுத்தோமோ, அப்போதிருந்தே நம்முடைய இயல்பான காரியங் களெல்லாம் நற்பண்புகளாக மாறிற்று. ஆனால் இயேசுவை நம் உள்ளத்தில் ஏற்றுக்கொண்ட பொழுதோ கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையை நாம் தரித்துக் கொண்டு மறுரூபமானோம். இயேசுவைச் சுமந்து கொண்டு செல்லும் நம்முடைய புதிய வாழ்க்கை பிறரை ஆச்சரியத்திற்குள்ளாக்குகிறது.

### 4. அலங்கரிக்கப்பட்ட கழுதை:

பாருங்கள்! இயேசு இராஜாவைச் சுமந்து சென்ற கழுதை அலங்கரிக்கப் பட்டது. நாமும் நீதியின் வஸ்திரம் தரிக்கப்பட்டவர்களாய் அழியாத அலங்கரிப்பாகிய சாந்தமும், மனத்தாழ்மையையும் தரித்தவர்களாய் புது சிருஷ்டிகளானோம்.

**நமது இலக்கு**

பிரபலங்களின் வருகையின் பொழுது சிவப்புக் கம்பள வரவேற்பு கொடுப்பது போல பல வர்ண வஸ்திரங்கள் விரிக்கப்பட்ட பாதையில் இயேசுவை சுமந்து வந்த கழுதை இராஜநடை போட்டு எருசலேம் நோக்கி பயணித்தது. இதுபோன்று அவருடைய பிள்ளைகளாகிய நமது இலக்கும் பரம எருசலேம் தான். குருத் தோலை ஞாயிறன்று திரள் கூட்ட மக்கள் குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு ஓசன்னா (எங்களை இப்பொழுதே இரட்சியும்) கர்த்தரின் நாமத்தினாலே வரு கிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்.

ஆனால் புதிய எருசலேம் நோக்கி பயணம் செய்யும் இரட்சிப்பைப் பெற்ற பயணிகளாகிய நாம் குருத்தோலைகளைக் கையிலேந்தி இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும், ஆட்டுக் குட்டி யானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரிப்போம்" என்று (வெளி.7:9,10) இல் சொல்லப்பட்டிருப்பது போல பரிசுத்தமாக்கப்பட்டு அவர் முன்பாக நின்று ஆர்ப்பரிப்போம்.

இவ்வாறு நம் இதயத்தில் இயேசுவை ஏந்திச் சுமக்கும் பாக்கியத்தை இம்மையில் பெற்று, மறுமையில் பரிசுத்தக் கூட்டத்துடன் ஆர்ப்பரித்து அகமகிழ ஆயத்தப்படுவோமாக! பிறரையும் ஆயத்தப்படுத்துவோமாக!!. தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!!!

**சகோதரி. ஜெயா சுசிலன்** ●

## நாம் ஏன் ஊழியம் செய்யவேண்டும்?

ஜாண் வெர்வர் என்பவர் ஆப்பரேஷன் மொபிலைசேஷன் (Operation Mobilization) என்ற ஊழிய அமைப்பின் நிறுவனர். ஒருநாள் அவர் தன்னோடு ஊழியம் செய்து கொண்டிருந்த ஊழியர்களைப் பார்த்து நாம் ஏன் இந்த ஊழியம் செய்ய வேண்டும்? என்ற ஒரு கேள்வியை எழுப்பினார். பலர், ஊழியம் செய்ய வேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவின் இறுதிகட்டளை என்றனர். சிலர் 'அழியும் ஆத்து மாக்களை காப்பாற்ற' என்று பதிலளித்தனர். யாவற்றையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டு இருந்த அவர் **"இயேசுகிறிஸ்துவின் அன்பினால் நிரப்பப் பட்டு, நிரம்பி வழியும் கிறிஸ்துவின் அன்பே ஊழியமாக மாறுகிறது"** என்று பதிலளித்தார். "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது" என்று அப்போஸ்தலனாகிய பவுல் 2 கொரி.5:14இல் குறிப்பிடுகிறார் அல்லவா. அதுதான் எப்பொழுதும் எல்லா சூழ்நிலைகளிலும் ஊழியத்தைச் சலிப்பின்றி, முனைப்போடு செய்ய உந்தித்தள்ளும் பேராற்றல்.

**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"**

**[யோவா.12:26].** ●

RNI NO. TNTAM/2001/06473

# வேர்டு ஆஃப் கிரைஸ்ட்

## கிறிஸ்தவ இலக்கிய புத்தக சாலை

## கிளைகள்

**பெரியகுளம் :**
ஜே.டி.என். பில்டிங்ஸ், வைகை அணை ரோடு,
பெரியகுளம் – 625 601. போன் : 04546 232689

**மதுரை :**
ராஜம் பிளாசா, தல்லாகுளம்,
மதுரை – 625 002. போன்: 0452 2535373.

**திருச்சி :**
எண்.1F, ஒய்.எம்.சி.ஏ. வளாகம்,
ஈ.வே.ரா.ரோடு, புத்தூர், திருச்சி – 620 017.
போன் : 0431 2792266.

**கெல்லிஸ் :**
எண்.100/3, நிர்மலா அப்பார்ட்மெண்ட்,
மேடவாக்கம் டேங்க் ரோடு, கெல்லிஸ்,
சென்னை–10. போன் 044 26613242 / 42640111.

**அடையார் :**
ஹபீப் காம்ளக்ஸ், எண்.5 துர்க்காபாய் தேஸ்முக்
ரோடு, சத்தியா ஸ்டுடியோ அருகில்,
சென்னை–28. போன் 044 24616161.

**தாம்பரம் :**
பழைய எண்.57 புதிய எண்.12,
வெங்கடேசன் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–45. போன் 044 – 22260743.

**போரூர் :**
எண்.22/1–A, ஆற்காடு ரோடு,
BSNL டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அருகில்,
போரூர், சென்னை–600 116. போன் : 044 – 24762520.

**புதுச்சேரி :**
எண்.66, செங்குந்தர் வீதி,
உருலான்பேட், நெல்லித்தோப்பு,
புதுச்சேரி – 605 005. போன் 0413 2204122.

**திமாப்பூர் :**
எண்.20, நியாமோ லோக்தா ரோடு,
திமாப்பூர் – 797 112. நாகலாந்து.
போன் : 03862 230207.

**இட்டா நகர் :**
ஆர்.கே. மிஷன் ரோடு, இட்டா நகர்,
அருணாச்சல் பிரதேஷ் – 791 113.
போன் : 0360 2217563.

**ஷில்லாங் :**
கேஜேபி அசெம்பிளி கான்பிரன்ஸ் சென்டர்
ஸ்டேட் சென்ட்ரல் நூல் நிலையம் எதிரில்,
ஷில்லாங். போன்: 0364–2500044 / 9445366066

**தூரா :**
ரிங்கேரி, மேற்கு காரோ ஹில்ஸ், தூரா,
மெகாலயா – 794 001.
மொபைல் : 03651 224729.

**போரிவலி (மே) :**
பில்பெரி, கடை எண்.1. ஐ.சி.காலனி,
கார்ப்பரேஷன் பேங்க் அருகில், போரிவலி மேற்கு,
மும்பை – 400103. போன் :022 28925763 / 09967645333

**ஹுப்ளி :**
எண்.L/1, சுவிதா அனெக்ஸ், கான்வென்ட் பள்ளி,
எதிரில், ஃபுட் பாஸ்கட் அருகில்,
கேஷ்வாஷபூர், ஹுப்ளி – 23,
போன் : 0836 6290555.

**கர்நாடகா:**
எண்.71, நேரு மெயின் ரோடு,
அரவிந் நகர்,
கமன ஹல்லி, (Below) முத்தூட் பைனான்ஸ்,
பெங்களூர் – 560 084. போன் : 08025 461144.

**நாகலாந்து :**
c.k.ஆர்காடு, தலைமை அஞ்சல் அலுவலகம்,
எதிரில், கொஹிமா – 797 001, நாகலாந்து.
போன் : 0370 2292222.

e-mail to : wocmdu@gmail.com

**Owned, Edited and Published by K. Selwyn Thangadurai,**
D.No.23B, "Thy Grace", Sebastian Church Road, New Ellis Nagar Extn., Madurai - 16.
Ph:0452:4345580. E-mail : wocmdu@gmail.com.
**website: www.wordofchrist.org**

Printed by Mr. Simon Peter at Vasanth Prints & Packs, No.45, Soorappa Mudali Street, Triplicane, Chennai - 600 005. Tamilnadu, India. Ph.044 28485805